# புது உலகில் பத்திரிகைகள்.

டாக்டர். சுதீந்திரபோஸ் எழுதுவது.

குறிப்பிட்ட எந்த நிமிஷத்திலும் அமெரிக்க ஐக்கிய இராஜ்யத்தின் ஜனங்கள் எல்லாரும் அநேகமாக ஒரே விஷயத்தைப்பற்றி எண்ணி, ஒரே விஷயம் பற்றிப் பேசுகிறார்கள் என்று கூறலாம். அமெரிக்கர்கள் பத்திரிகை படிப்போரில் தலை சிறந்தவர்களாயிருப்பதே இதற்குக் காரணம் என்பதில் சந்தேகமில்லை. "அமெரிக்காவில் பிரசுரிக்கப் பட்ட மிகச் சக்தி வாய்ந்த புத்தகம் சமாசாரப் பத்திரிகையே" என்று ஹென்ரி வார்டு பீச்சர் என்பார் கூறினார். நாள் தவறாமல் அடங்கா ஆவலுடன் அமெரிக்கர்கள் படிக்கும் புத்தகம் அதுவே யாகும்.

மிக இழிவான பிரசாரகர்கள் முதல் உயரிய அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வரையில் எல்லாரும் பொது ஜன அபிப்பிராயத்தை உருப் படுத்துவதற்குப் பத்திரிகைகளையே சாதனமாகக் கொண்டு அவற்றின் உதவியை ஆவலுடன் தேடுகிறார்கள். காங்கிரஸ் (அமெரிக்காவின் பார்லிமெண்ட்) அங்கத்தினர்கள் பொது விஷயங்களைப் பற்றித் தங்கள் அபிப்பிராயங்களைப் பத்திரிகை நிருபர்கள் மூலம் வெளியிடும் சந்தர்ப்பம் கிடைத்தால் அதைக் கைவிடுவதேயில்லை. அன்னிய நாட்டு மந்திரி ஒவ்வொரு நாளும் காலையில் ஒரு மணிநேரம் பத்திரிகைப் பிரதிநிதிகளுடன் பேசுவதில் கழிக்கிறார். அமெரிக்கக் குடியரசின் அக்கிராசனர் கூட வாரத்திற்கொருமுறை தமது சுவேத மாளிகையின் சபா மண்டபத்தில் நின்று அங்கே வரும் சுமார் 200 பத்திரிகைப் பிரதிநிதிகளிடம் பேசுகிறார். இப்பத்திரிகை நிருபர்கள் குடியரசின் தலைவரை மிகக் கடுமையாகக் குறுக்கு விசாரணை செய்யத் தயங்குவதில்லை. அரசாங்கத்தின் வருங்கால முறைகள் திட்டங்கள் இவைகளைப்பற்றி அவர்கள் தாராளமாகக் கேட்பார்கள். பெரும்பாலும் அவர்களுக்குவேண்டிய செய்திகள் கிடைத்து விடும்.

"சிகாகோ டிரிப்யூன்" பத்திரிகையின் வாஷிங்டன் நிருபர்களின் தலைவராய் நீண்ட காலம் இருந்த மிஸ்டர் ஆர்தர் ஹென்னிங், அக்கிராசனர் ரூஸ்வெல்ட் பத்திரிகைக்காரர்களுடன் மிகத் தாராளமாய்ப் பழகுவதுண்டென்று கூறுகிறார். அடிக்கடி அவர் க்ஷவரம் செய்து கொண்டிருக்கும் போது பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி கொடுப்பாராம். கத்தி வெட்டிவிடப்போகிறதேயென்ற பயமும் இல்லாமல் பத்திரிகை நிருபர்களுடன் வெகு உற்சாகமாகப் பேசுவாராம்.

அரசாங்கத்தின் அதிகாரமெல்லாம் பொதுஜன அபிப்பிராயத்தை அடிப்படையாகக் கொண்டவை என்று நெப்போலியன் கூறினான். வேறெந்த நாட்டிலும் விட இத்தேசத்தில் அது முற்றும் உண்மையாகும். இங்கே அச்சுக்கூடங்கள் நயகரா நீர் வீழ்ச்சியே போல் பத்திரிகைகளைச் சொரிகின்றன. கடைசியாக எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி அமெரிக்காவில் 2433 தினசரிகளும், 592 வாரப் பத்திரிகைகளும் நடக்கின்றன. இவை எல்லாம் சேர்ந்து வருஷத்தில் மொத்தம் 1, 127, 05,59,316 பிரதிகளை வெளியிடுகின்றன.

அமெரிக்கப் பத்திரிகைகளைக் குறை கூறும் சில அதிக மரியாதையுள்ள கனவான்கள் உண்டு. அவர்கள் "பத்திரிகை பயங்கரம்" என்றும், "அவதூறுக் களஞ்சியம்" என்றும், "பழிபாவத்துக்கஞ்சா நிருபர்கள்" என்றும், "குணம் செய்ய முடியாத பொய் சொல்லும் நோய்" என்றும் பத்திரிகைகளைப் பற்றிச் சொல்வார்கள். ஆனால் பொதுவாகப் பத்திரிகை உலகின்மீது இப்படிக் குறை கூறுதல் பொருந்தாது. சாக்கடைப் பத்திரிகைகள் சில இல்லாமற் போகவில்லை. இவை பணம் ஒன்றையே பிரதானமாகக் கொண்டு நடப்பவை. ஆனால் இவை பொது ஜனங்களில் பொறுப்புள்ளவர்களின் அபிப்பிராயங்களைப் பிரதிபலிப்பன வல்ல. சாக்கடைப் பத்திரிகைகளில் சில ஏராளமாக விற்பனையாவதும் உண்மையே. ஆனால் அதிலிருந்து அவற்றின் செல்வாக்கை நிர்ணயிக்கக் கூடாது. நிதானமுள்ள, அறிவுடைய ஜனங்கள் மீது அவற்றிற்குச் செல்வாக்கே இல்லையென்று [illegible] வீழ்ச்சி சேய்மையிலில்லை என்பதற்கு அறிகுறிகள் காணப்படுகின்றன.

பொது ஜனங்களின் நம்பிக்கையைப் பெற்றவர்களும், உயரிய பொது நல நோக்கங்கொண்டவர்களுமான பத்திரிகாசிரியர்கள் ஜனங்களின் தீய உணர்ச்சிகளைக் கிளப்பும் முறையில் பத்திரிகை நடத்துவதை வெறுக்கிறார்கள். பத்திரிகை தர்மத்தில் அவர்கள் உறுதி கொண்டவர்கள். சுய நலம் அறவே அற்றவர்களா யில்லாதபோதும் அவர்கள் செய்திகளை அநியாயமாகத் திரித்து வெறி யூட்டும் முறையில் வெளியிடுவதில்லை.

பொது ஜனங்கள் போற்றி மரியாதை செய்யும் பத்திரிகைகள் அமெரிக்காவில் சில உண்டு. பாஸ்டன் நகரைச் சேர்ந்த ஒரு பெண்மணி "பாஸ்டன் டிரான்ஸ்கிரிப்ட்" என்னும் பத்திரிகையினிடம் தமக்குள்ள பக்தியைப் பின் வருமாறு வருணித்திருக்கிறார்:—

"நானும் என் சகோதரியும் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருக்குங்கால், ரயில் கொள்ளைக்காரர்கள் வந்து வழி மறித்துக்கொண்டால் நாங்கள் உடனே வண்டியிலுள்ளவர்கள் எல்லாரையும் உற்றுப் பார்ப்போம். "டிரான்ஸ்கிரிப்ட்" பத்திரிகை எவர் கையில் இருக்கிறதோ அவரிடம் ஓடிச் சென்று எங்களைக் காப்பாற்றும்படி வேண்டிக் கொள்வோம். ஏனெனில் அப்பத்திரிகை படிப்பவர் நாணயமுள்ள கனவானாயிருப்பார் என்று எங்களுக்கு நிச்சயம்".

சிறந்த பத்திரிகைகளிலும் சில சமயம் தப்புச் செய்திகள் வந்து விடுவதுண்டு. ஆனால் அவை அவசரத்தினால் நேர்வனவே யன்றி வேண்டுமென்று செய்யப்படுபவை யன்று. அக்கிராசனர் ஹார்டிஞ்சை கண்யமுள்ள பத்திரிகாசிரியர்களுக்கு நான் உதாரணமாகக் கொள்வது வழக்கம். அவர் அக்கிராசனர் ஆவதற்கு முன் 30 வருஷகாலம் "மோரியன் ஸ்டார்" என்ற பத்திரிகையின் தலைமை ஆசிரியராயிருந்தார். அவர் தம் கீழ் வேலை செய்யும் பத்திரிகாசிரியர் குழாத்துக்குப் பின்வரும் விதிகளை ஏற்படுத்தியிருந்தார்:—

"ஒவ்வொரு விஷயத்துக்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. இரண்டையும் சம்பாதிக்க முயல்க.

உண்மை கடைப்பிடி. பாதி தப்பான நூறு விஷயங்களைப் பிரசுரிப்பதை விட முற்றும் சரியான ஒரு விஷயத்தை வெளியிடுவது போதும்.

மரியாதை, நேர்மை, தயாளம் இவற்றைக் கைக் கொள். எவரையும் தூக்கிவிடவே முயல்; கீழே தள்ளாதே.

ஒவ்வொருவரிடத்திலும் நல்லது கொஞ்சமேனும் இருக்கும் என்பதை நினைவில் வை. அதை வெளிப்படுத்த முயல். அநாவசியமாக யார் உள்ளத்தையும் புண்படுத்தாதே.

மத சம்பந்தமான எந்த விஷயத்தைப் பற்றியும் பயபக்தியுடன் நடந்து கொள்.

குற்றவாளி ஒருவனின் குற்றங்களைப் பற்றிச் சொல்கையில், யாதொரு பெண் அல்லது குழந்தைக்கு அவமானம் தரும் விஷயத்தைக் கூடுமானால் விட்டு விடு.

தூய்மை கடைப்பிடி. ஆபாச வார்த்தையோ, பிறரை இழிவு படுத்தும் கருத்துள்ள மொழியோ அச்சில் போகாதபடி பார்த்துக்கொள்.

பத்திரிகையில் எந்தப்பகுதியும் பச்சைக் குழந்தைகளும் படிக்கத் தகையதா யிருக்க வேண்டும்."

அமெரிக்கப் பத்திரிகாசிரியர்களில் பெரும்பாலோர் மேற்கூறிய இலட்சியங்களையே கூடியவரையில் கடைப்பிடிக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன்.

பத்திரிகை நடத்துவதென்பது விளையாட்டன்று. அதில் கஷ்டங்கள் பல இருக்கின்றன. முக்கியமாக பத்திரிகை நேயர்கள் எல்லாரும் ஒரே வகை நோக்கமும், மனோபாவமும் இல்லாதவர்களா யிருப்பதே மேற்படி கஷ்டங்களுக்குக் காரணமாகும். ஒரு பத்திரிகாசிரியர் தமது துயரங்களைப் பின் வருமாறு சொல்லியழுகிறார்:—

"பத்திரிகை நடத்துவதென்றால் சிற்றுண்டி விருந்தன்று. பத்திரிகையில் ஹாஸ்யங்கள் வெளியிட்டால் எங்களை விளையாட்டுப் புத்திக்காரர்கள் என்று ஜனங்கள் குறை சொல்கிறார்கள்.

ஹாஸ்யங்கள் வெளியிடாவிட்டால், அழு மூஞ்சிகள் என்று புகார் கூறுகிறார்கள்.

சொந்தக் கட்டுரைகள் வெளியிட்டால் பல விஷயங்களும் இல்லையென்கிறார்கள்.

மற்றப் பத்திரிகைகளிலிருந்து எடுத்துப் போட்டால் சோம்பேறிகள், தாங்களே எழுதுவதில்லை யென்கிறார்கள்.

காரியாலயத்திலிருந்து காரியத்தைப் பார்த்தால், ஓடி யாடிச் செய்திகள் சேகரிக்கவில்லை!

ஓடி யாடிச் செய்திகள் சேகரித்தால், உடல் வணங்கி உட்கார்ந்து எழுதுவதில்லை!

சந்தா நேயர்களின் நிருபங்களைப் பிரசுரியா விட்டால், சந்தா நேயர்களிடம் மரியாதை காட்டுவதில்லையென்று புகார்!

அவற்றை வெளியிட்டாலோ பத்திரிகையில் குப்பையுங் கூளமும் போட்டு நிரப்புகிறார்கள் என்னும் குறை!"

தற்காலத்துச் சமாசாரப் பத்திரிகை பெயர் எடுக்க வேண்டுமானால் அஃது உலகத்தின் வாழ்க்கை முழுவதையும் படம் பிடித்ததுபோல் காட்டவேண்டும். "தினசரிப் பத்திரிகை யென்பது உலகத்தின் கண்ணாடி; உலகம் தினம் காலையில் அதில் தன் முகத்தைப் பார்த்து மகிழ்கிறது" என்று பத்திரிகைத் தொழில் கலாசாலை ஒன்றின் தலைவரான டீன் ஹாரிஸ்டன் சொல்கிறார். ஆம்; பத்திரிகை பெயர் எடுக்க வேண்டுமானால் அது சமாசாரப் பத்திரிகையாயிருக்க வேண்டும்; அபிப்பிராயப் பத்திரிகையாயிருக்கக்கூடாது. இதிலிருந்து, சமாசாரம் என்றால் என்ன என்னும் கேள்வி எழுகிறது. நடந்த, நடக்கப் போகிற நிகழ்ச்சிகள் எல்லாம் சமாசாரம் தான். ஆனால் அமெரிக்கப் பத்திரிகை உலகில் இதற்குக் கொள்ளப்படும் பொருள் "அதிகமான வாசகர்களுக்குச் சுவையளிக்கக் கூடிய கடைசியான நிகழ்ச்சிகளின் விவரம்" என்பது. இதன் காரணமாக சில பெரிய பத்திரிகைகளின் தலைமை யாசிரியர்கள், குறைந்தது 10,000 ஜனங்களுக்காவது சுவையளிக்கக் கூடாத எவ்விஷயத்தையும் பத்திரிகையில் போட வேண்டாமென்று தங்கள் கீழுள்ளவர்களுக்குக் கட்டளை பிறப்பித்திருக்கிறார்கள்.

மற்றும் வாசகர்களின் மனதைச் சட்டென்று கவரக் கூடிய செய்திகளே மிகச் சிறந்தவையென்று அமெரிக்கப் பத்திரிகைகள் கருதுகின்றன.

நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு டாக்டர் ஸாமுவேல் ஜான்ஸன் என்பார் "பிளீட் தெருவில் ஒரு குதிரை நெறிகெட்டு ஓடினால், அது சீனத்தில் லட்சக் கணக்கான ஜனங்களை அழித்த புயலை விட லண்டன் ஜனங்களுக்கு முக்கியமானது" என்று கூறினார். இவ்வுண்மையைத் தற்போது பத்திரிகைக் காரர்கள் நன்குணர்ந்திருக்கிறார்கள். இதே விதமாக, ஒரு மனிதனை நாய் ஒன்று கடித்தால் அமெரிக்கப் பத்திரிகை நிருபருக்கு அது முக்கியமான செய்தியாகாது. நாய்கள் மனிதர்களைக் கடிக்குமென்பது எல்லாருக்கும் தெரியும். அதில் புதுமை, மனதைக் கவரக் கூடியது எதுவுமில்லை. ஆனால் ஒருமனிதன் நாயைக் கடித்தால் அது முதல்தரமான செய்தியாகும். பத்திரிகைத் தலைவரின் முக்கியமான வேலை தமது பத்திரிகையில் கொள்ளும் அளவுக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு வெவ்வேறு விஷயங்களை நிரப்பி, அதிகமான வாசகர்களுக்குச் சுவை தரும்படி செய்வதேயாகும்.

மற்றும் செய்திகள் எல்லாம் புத்தம் புதியனவா யிருக்கவேண்டும். ஆறிய கஞ்சி பழங்கஞ்சி என்பது பத்திரிகை உலகில் மிகப் பொருத்தமானது. செய்திகளைச் சுடச் சுடக் கொடுக்கவேண்டும். இவ்விஷயத்தில் அமெரிக்க நிருபர்கள் மிகத் தேர்ந்தவர்கள். அவர்களைத் துரிதப் பிசாசுகள்என்றே சொல்லவேண்டும். அவர்கள் பகலை இரவாகவும், இரவைப் பகலாகவும் கொள்வார்கள். தீ, புயல், கொலை முதலியவை நேர்ந்து விட்டால் எந்த நேரமாயிருந்தாலும் பத்திரிகை நிருபர்களின் கூட்டத்தை அங்கே காணலாம். நிகழ்ச்சி நேர்ந்த இடம் காரியாலயத்திலிருந்து தூரத்தில் இருந்தால் பக்கத்திலுள்ள டெலிபோனுக்குச் சென்று எல்லாச் செய்திகளையும் சொல்லி விடுவார்கள். காரியாலயத்தில் அவை அச்சுக்குத் தயாராக்கப்பட்டு நிகழ்ச்சி நேர்ந்த ஒரு மணி நேரத்திற்கெல்லாம் விசேஷ வெளியீடு பிரசுரிக்கப்பட்டு விடும்.

நூலாசிரியர்களுக்கும் பத்திரிகைகளுக்கு எழுதுவோருக்கும் வேலை முறையில் நிரம்ப வித்தியாசமுண்டு. ஆஸ்கார் ஒயில்ட் என்னும் பெயர் பெற்ற நூலாசிரியரைப்பற்றி ஒரு கதை சொல்லப்படுகிறது. ஒரு முறை அவர் தமது நண்பர் வீட்டுக்கு விருந்தாளியாகச் சென்றிருந்தார். ஒரு நாள் காலையில் எல்லாருடனும் இருந்த போது திடீரென்று தமக்கு எழுதும் மனோ நிலை ஏற்பட்டிருப்பதாகச் சொல்லி விட்டுத் தனியறை ஒன்றுக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு அன்றெல்லாம் கழித்தார். மாலையில் எல்லாரும் உணவருந்திக் கொண்டிருந்தபோது, நண்பரின் மனைவி அவர் அன்று எழுதியதென்னவென்று கேட்டார்.

"இன்று காலை என்னுடைய கவிகளில் ஒன்றில் ஒரு 'கமா' (கால்புள்ளி) போட்டேன்" என்று ஆஸ்கார் ஒயில்ட் பதிலளித்தார்.

"பிற்பகலிலும் அவ்வளவு கஷ்டப்பட்டே வேலை செய்தீர்களோ?" என்று அப் பெண்மணி மரியாதையுடன் வினவினார்.

"ஆம்; பிற்பகலில் அந்தக் 'கமா'வை மறுபடியும் நீக்கிவிட்டேன்" என்றாராம்.

அமெரிக்கப் பத்திரிகை நிருபர்கள் இந்த முறைபற்றி வேலை செய்ய இயலாது. ஒவ்வொரு நிமிஷமும் அவர்களுக்கு முக்கியமானது. மின்னல் வேகத்தில் அவர்கள் பத்திரிகைப் பத்திகளை நிரப்பியாகவேண்டும். வேகமாக எழுதுவது மட்டும் போதாது. வாசகர்களின் உள்ளத்தைப் பிடித்திழுக்கும் முறையில் எழுதவேண்டும். அவர்கள் எச் செய்தியையும் வரிசைக் கிரமமாக எழுதுவதில்லை. செய்தியின் மிக முக்கியமான பகுதி தொடக்கத்திலேயே வந்துவிட வேண்டும். முதல் பாரா, கூடுமானால் முதல் வரியே வாசகர்கள் மனதைக் கவர்ந்துவிடவேண்டு மென்பது நோக்கம். வாசகர்கள் கீழே படித்துக் கொண்டு

(இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## மணி வாசகங்கள்.

(முன் தொடர்ச்சி.)

ராஜீய முன்னேற்றமும், சுதந்திரமும் அடைய விரும்பும் எந்த தேசத்தாரும், சமூகத்தாரும் ஆரோக்கியக் குறைவின்றி வாழும் அடிப்படையான முறைகளை முதலில் அறிய வேண்டியது அத்தியாவசியமானது. எந்த சமூகத்தையும் பணச் செலவில்லாமல் எளிதில் நோய் முதலான துன்பங்களிலிருந்து காத்து தேச மக்களை ஆரோக்கியர் களாக்குவதற்கு இயற்கை சிகிச்சை முறைதான் ஏற்றதென்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

**ஆர். வி. சட்டர்ஜி.**

ஆத்மா தான் சரீரத்துக்கு அடிப்படையாக விளங்குவதால், எதிர்கால மனித வர்க்கம் நமது வாழ்க்கையின் தத்துவத்தையே பொறுத்திருக்கிறது. ஒரு காலத்தில் இந்தியா தத்துவ ஞானத்தில் உலகத்திலேயே தலை சிறந்து விளங்கின போதிலும் தற்காலம் பின்னடைந்திருக்கிறது, வேதாந்த தத்துவங்களை ... பூஜை செய்யப்படும் விக்கிரகங்கள் போன்ற நல்ல வாகையால் புனராலோசனை செய்ய வேண்டிய அவசியம்.

**எஸ். ராதாக் கிருஷ்ணன்.**

விவாகத்திற்குப் பிறகு தேவ தாசிகளைப் பற்றி பிரஸ்தாபிக்க வேண்டியதே சிரமம். தேவ தாசிகளிரா விடில் குடித்தன ஸ்திரீகளுடைய நன்னடத்தைக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமென்பதை உத்தேசித்து நமது பெரியோர்கள் தேவ தாசிகளை ஏற்படுத்தினதாகச் சொல்வது வழக்கம். ஒரு ஸ்திரீயைக் கண்டு மோகிப்பவன் மற்றொரு ஸ்திரீயைக் கண்டும் மோகிப்பான். தேவ தாசிகள் போய்விட்டால் சங்கீதம் போய்விடு மென்று பயப்பட வேண்டியதில்லை. குடும்ப வாழ்க்கையுள்ளவர்கள் சங்கீதத்தை ஏன் அப்பியாசிக்கக் கூடாது?

**ஸ்ரீ கே. நடராஜன்.**

லிபரல் கட்சி எவருடனும் நல்லெண்ணத்துடன் வேலை செய்ய விரும்பினும், அது இந்தியாவின் அரசியலை நிர்ணயிப்பதற்கான வேலையில் திறம்படக் கலக்கப் பெற்றிருக்கும் உரிமைக்கு மாறாகவும், இந்தியாவின் சுயமரியாதைக்கு மாறாகவும் உள்ள எதையும் செய்ய முடியாது.

**ஸர். ஸாப்ரு.**

தேசத்திற்கு நன்மை பயக்கக் கூடிய தொழில் தான் உத்தமமான வைசியர் தொழில். கதருக்கு நாம் போதிய ஆதரவு செய்ய வேண்டும். விவாகம் முதலிய சடங்குகளுக்கு அதிகப் பணத்தைச் செலவு செய்யும் வழக்கத்தையும் விட்டு விட வேண்டும். பல குடும்பங்கள் க்ஷீணித்துப் போனதற்கு இதுவே காரணமாய்த் தெரிகிறது. நகைப் பைத்தியமும் நாடெங்கும் அதிகரிக்கிறது. இப் பிரமையை ஒழிக்க வேண்டும்.

**சேத் ஜமன்லால் பஜாஜ்.**

மரக் கறி உணவுதான் மனிதனுக்கு அடுத்தது என்று நான் கண்டிப்பாகச் சொல்லுவேன். மாமிசம் சாப்பிடுகிறவர்களால் பல ஜீவ ஜந்துக்கள் கொல்லப்படுகின்றன. மாமிசம் உண்பதால் பலம் அதிகரிக்கு மென்பது தவறு. உண்மையில் பருப்பு, நெய், வாதம் பருப்பு சாப்பிடுகிறவர்களுக்கு மாமிசம் சாப்பிடுகிறவர் ஈடாக மாட்டார்.

**மதன்மோகன மாளவியா.**

ஆரிய ஸமாஜத்திற்கும், ஸனாதன தர்மத்திற்கும் யாதொரு வித்தியாசமுமில்லை, இப்பொழுதுள்ள இந்து சமூக நீதியை ஒழித்து 5000 வருஷங்களுக்கு முன்னிருந்தது போலவே மீண்டும் ஏற்பட வேண்டும். இது தான் ஆரிய ஸமாஜத்தின் கொள்கையாகும்.

**டாக்டர். முஞ்சே.**

வகுப்புத் துவேஷச் சண்டைகள் இல்லாத நாளே கிடையாது. காங்கிரஸ் தன் செல்வாக்கை இழந்தது தான் அதற்குக் காரணம். பல மார்காணங்களில் வகுப்பு ஸ்தாபனங்கள் முதன்மையாகவும், காங்கிரஸ் ஸ்தாபனம் இரண்டாவதாகவும் கருதப்படுகிறது. இம் மாதிரி நடக்கும்படி நாம் அனுமதித்துக் கொண்டிருக்கக் கூடாது. இந்து முஸ்லீம் வித்தியாசங்களை ஒழித்தே தீர வேண்டும். லக்ஷக் கணக்கான தீண்டாதார்களைப் பற்றி நாம் பேசாதிருக்க முடியாது. தீண்டாமை ஒழிப்பது ஒரு முக்கிய விஷயமாக ஒவ்வொரு இந்தியனும் கருதுவானானால் அவர்கள் நம்முடைய தேச விடுதலைக்குத் தடையாக நிற்கவே மாட்டார்கள்.

**டாக்டர். அன்சாரி.**

## ஸ்ரீ கோவிந்தசாமி யோகிகள் சமாப்தியானார்.

இராமநாதபுரம் ஜில்லா, பெருநாழியில் தேவ ஒளி வீசி இருக்கை கொண்டிருந்த சித்து ரூபர்க்குரிய ஸ்ரீ கோவிந்தசாமி யோகிகள் 30–12-27-ல் ஸ்தூல சரீர வாழ்க்கை நீங்கப்பெற்று 1-1-28ல் சமாதி செய்யப்பட்டார்கள். யோகிகள் சமாப்தியாவதற்குஒரு மாதத்திற்கு முன்னரே தம்மை ஒருவரும் வந்து தரிசிக்கக் கூடாதெனத் திரை கொண்டு மறைக்கச் செய்து, காமாக்ஷி என்ற ஒரு நாடார்குலச் சிறுமிமட்டும் பால் கொணர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கும்படி செய்து விட்டார். பையன் வழக்கப்படி பால் கொண்டு போன சமயத்தில் யோகிகள் தேக வியோக மாயதைக் கண்டான். ஊரார்க்கு உரைத்தான். ஜனங்கள் யோகிகள் வழக்கம்போல் யோக நிஷ்டையிலிருக்கலாம் என ஆசங்கை கொண்டார்கள். பக்கத்தூர் பம்மனேந்தல் ஸ்திரீ சிவண்டியார் ஆதிமூலத்தம்மாள் பார்ஸ்வயின் மேல் யோகிகள் சிவலோக பிராப்தியாயினர் என்று புலனாகியது. உடனே கமுதி நாடார் பெருமக்களுக்கு தகவல் அனுப்பப் பட்டது. அவர்கள் கிரியைக்கான சகல சாமான்களுடனும் வந்து சேர்ந்தார்கள். எங்கும் பரபரப்பு எங்கும் இதைப்பற்றிய பேச்சு. எங்கும் யோகிகளின் புகழுரை. இந்நேரத்தில் பொறாமைப் பேய் சடை விரித்தாட ஆரம்பித்தது. பின் போலீஸ் பந்தோபஸ்தைக் கண்டு படுத்துக் கொண்டது. யோகிகள் நாடார்கள் பால் பரஸ்பர அருள் கொண்டு அவர்கள் சம்ரக்ஷணையிலிருந்து வந்தவர்களாகையால் நாடார்களே அவர்களை சமாதிசெய்ய வேண்டுமென்பது யாருக்கும் சொல்லத் தேவையின்று. நாடார்கள் பால் காய்மகாரங்கொண்ட சிலர் துர்ப்போதனையால் யோகிகள் வகுப்பினராகிய மறவர்கள் யோகிகளைத் தாம் சமாதி செய்ய வேண்டுமென்று பலாத்கார முறை கையாள முயன்றனர். உடனே கலெக்டருக்குத் தந்தி கொடுக்கப்பட்டது. போலீஸ் படை கூடியது. பொறாமை கொண்டார் காரியம் பலிதமாகவில்லை. சுமார் 5000 ஜனங்களும் போலீஸ் படைகளும் புடைசூழ ஸ்ரீமான் முனியாண்டி நாடாரவர்கள் புஞ்சையில் யோகிகள் முன்பு யோகஞ் செய்து கொண்டிருந்த விடத்திலேயே கொண்டு போய் அடக்கம் செய்தார்கள். யோகிகள் 3 தினங்களாக இறந்து பட்டிருந்தும் சரீரத்தில் ஒரு வித மாறுதலும் தெரியாமலிருந்ததைக் கண்டு ஜனங்கள் யோகிகளின் மகிமை யுன்னிப் பிரமித்துவிட்டார்கள். 45-வது நாள் மண்டல பூஜை நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## விருந்தில் சாவு.

### 27–பேர் மரணம்.

கொரிய தேசத்தில் தைகூ என்ற இடத்தில் ஒரு கலியாணத்தில் விருந்து நடந்தது. விருந்தில் மீன் வழங்கப்பட்டது. அதில் ஏதோ விஷம் கலந்திருந்ததால் விருந்துண்டவர்களில் 27–பேர் உடனே இறந்தார்கள். இன்னும் 259 பேர்கள் அவஸ்தைப்படுகிறார்கள். இதில் பலபேர் நிலைமை ஆபத்திற்கிடமானதாயிருக்கிறது எனச் செய்தி கிடைத்திருக்கிறது.

## தாயார்க்கும் மகனுக்கும் சம்பாஷணை.

(அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசார சபையிலிருந்து.)

மகன்:—அம்மா! நான் இன்று முதல் சைவம் பிடித்திருக்கிறேன். நான் சாப்பிடும் பொழுது இனிமேல் எனக்கு இலையில் மாமிசம் வைக்காதேயுங்கள்.

தாயார்:—இதென்னப்பா! புதிதாகச் சொல்லுகிறாய். சைவம் பிடித்தால் உன் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது. பேசாமல் வைக்கிற கறியைச் சாப்பிடு. வம்பு செய்யாதே.

மகன்:—என்ன அம்மா இப்படிச் சொல்லுகிறீர்கள்? நான் சைவம் பிடித்தால் உங்களுக்கு என்ன கஷ்டம்? மாமிசம் புசிப்பது எனக்கு அருவருப்பாயிருக்கிறது. நான் மாமிசம் சாப்பிட மாட்டேனென்று சொன்னால் நீங்கள் எதற்கம்மா கட்டாயப்படுத்துகிறீர்கள்?

தாயார்:—அப்பா! நீ சிறு பிள்ளைத் தனமாகப் பேசுகிறாய். உனக்கு நல்லது பொல்லாதது ஒன்றும் தெரியாது. வழக்கமாகச் சாப்பிட்டு வந்த மாமிசத்தை நிறுத்தி விட்டால் உடம்பு வாடி, வதங்கி இளைத்துப் போகும். சொல்லுவதைக் கேள்.

மகன்:—இதில் உங்களுக்கு ஏனம்மா பிடிவாதம்? மாமிசம் சாப்பிடாவிட்டால் உடம்பு இளைத்துப் போகுமென்று உங்களுக்கு யாரம்மா சொன்னது? பிறந்ததிலிருந்தே மாமிசம் சாப்பிடாதவர்களும், சிறிது காலம் சாப்பிட்டு பின் நிறுத்தியவர்களும் எவ்வளவோ பலசாலிகளா யிருக்கின்றார்களே! பிரக்யாதி பெற்ற சாண்டோ, இராமமூர்த்தியும் சைவம்தானே பிடித்திருக்கிறார். இன்னும் தாங்க முடியாத சரீரத்தினையுடைய யானையும், ஒட்டகை, ஆடு, மாடு, குதிரை, மான் முதலியனவும் சைவமல்லவா பிடித்திருக்கின்றன? அவைகளுக்கெல்லாம் நிறைந்த பலமில்லையா?

தாயார்:—அப்பா வீணாகக் கதை படிக்காதே. மாமிசம் சாப்பிடாவிட்டால் உடம்பு என்னத்துக்கு ஆகும்? எய்த்து இளைத்தன்றோ போகும்!

மகன்:—என்ன அம்மா! எவ்வளவு சொன்னாலும் சரியான காரணம் சொல்லாமல் பிடிவாதமாய்ச் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லுகிறீர்கள்? என்பாடு. எனக்கு மாமிச உணவு பிடிக்க வில்லை யாகையால் சைவம் பிடிக்கிறே னென்றால் இதில் நீங்கள் ஏன் இவ்வளவு கஷ்டப்படுத்துகிறீர்கள்?

தாயார்:—அப்பா! சைவம் பிடித்து கத்தரிக்காய் வாழைக் காயையே தின்று கொண்டிருந்தால் குடலெல்லாம் வரண்டு வாய் வயிறெல்லாம் வெந்து போகும்.

மகன்:— பேஷ்! ஆட்டையும், கோழியையும், கருவாட்டையும் அவித்துத் தின்றால் வாய், வயிறு குடலெல்லாம் ஊதிப்போகுமோ? ஆஹா! என்ன அருமை!! இது எந்த சாஸ்திரத்திலம்மா சொல்லி யிருக்கிறது?

தாயார்:—அப்பா! சாஸ்திர மெல்லாம் எனக்குத் தெரியாது. நீதான் எல்லாம் தெரிந்தவன். நான் சொல்வதைக் கேட்க மாட்டே னென்று பிடிவாதம் செய்கிறாய். இனி உன் இஷ்டம்போல் நன்றாகச் சைவம் பிடித்துப்பார்.

மகன்:—அம்மா! சைவம் பிடிப்பதால் உடம்புக்கு ஒத்துக் கொள்வதும், ஒத்துக் கொள்ளாததும் அவர் அவர் மனதைப் பொறுத்ததுதான். ஆனால் மாமிச உணவை நீக்குவது எல்லா உடம்புக்கும் நன்மையையே செய்யும். இதைப் பற்றி பெரிய பெரிய வைத்திய நிபுணர்களெல்லாம் விஸ்தாரமாய்க் கூறியுள்ளார்கள். ஆகையால் இன்று முதல் நான் சைவம் பிடிக்கிறேன். எனக்கு உடம்புக்கு ஒத்துக் கொண்டது தெரிந்த பின்னராவது நீங்களும் சைவம் பிடியுங்கள்.

தாயார்:— அப்பா மகனே! நீ சொல்லிய விஷயங்களெல்லாம் முன்னமேயே தெரிந்திருந்தால் உன்னுடன் இவ்வளவு வாதாடி யிருக்க மாட்டேன். இப்போது தான் சைவ உணவின் பெருமையை நன்றாய்த் தெரிந்து கொண்டேன். நானும் இது முதல் சைவம் பிடித்து விட்டேன். இனி மாமிசம் சாப்பிடவே மாட்டேன். இது சத்தியம்.

கொன்று தின்பது, நன்றெனச் சொல்லும் தாய் தந்தையர்களே! உங்களுக்கு மிகவும் வினயத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். கொன்று தின்பது கூடாது. இது முதலே இவ் வழக்கத்தை விட்டு விடுங்கள். மாமிசம் சாப்பிடுவதை நிறுத்திவிடுவது என்ன ஒரு பெரிய மலையா? அல்லது கடக்க முடியாத கடலா? எல்லாம் உங்கள் மனம் தான் காரணம். நாம் சிறுவர்களா யிருக்கும்போது என்னென்ன வெல்லாமோ செய்தோம். வர வர இளமையில் செய்தவைகளை வெறுக்கின்றோ மல்லவா? இதுபோல் மாறுதல் என்பது இயற்கைதான். இதுவரையும் சாப்பிட்டுவந்த மாமிச உணவை விட்டுவிட முடியவில்லையே என்று சொல்ல இடமில்லை.

அன்பர்காள்! சாராயமும் மாமிசமுமே பிரதான உணவாகக் கொண்ட மேல் நாட்டார் கூட மாமிச உணவை நீக்கியும் நீக்குதவற்கான பிரசாரம் செய்தும் வருமிந்நாளில் ஞானம், கல்வி, கருணை, சாந்தம் நிறைந்துள்ள இந்திய நாட்டு மக்களாகிய நாம் இன்னும் மாமிசத்தை உண்போமாயின் மிக மிக வெட்கரமான செயலாகும். பெரியோர்களே! கல்விமான்களே!! இது முதலாவது மாமிசம் சாப்பிடுவதையும், ஆலயங்களில் சுவாமி பெயரைச் சொல்லி ஏழை உயிர்ப் பிராணிகளைக் கொலை செய்வதையும் நிறுத்தி விட்டு சரீரத்திற்கு உறுதியும், அறிவு வளர்ச்சியும் தரக் கூடிய தானியங்களையும், காய் கனிகளையும் உண்டு மகிழுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## ஜாதி வித்தியாசம் ஒழிந்துவருகிறது.

### மாணவர்கள் பிரசாரம்.

உரத்தநாடு உயர்தரக்கலாசாலை திராவிட மாணவ சங்கத்தாரில் ஐவர் 24-ம் தேதி சனிக்கிழமையன்று உரத்த நாடு விட்டு பிரசாரத்தின் பொருட்டு புறப்பட்டனர். 25–ம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 8–மணிக்குத் திருத்துரைப்பூண்டித்தாலுகா மேட்டுப்பாளையம் மாநிலக்கிழவர் ஸ்ரீமான் அமிர்தலிங்க நாடார் அவர்கள் வீட்டில் வந்திறங்கினர். அவ்வாறு சென்ற மாணவர்களுள் இருவர் முதலியார்; ஒருவர் நாயுடுகார்; மற்றொரு பிள்ளை; பின்னொருவர் நாடார் ஆகிய பல வகுப்பினர் அடங்கியிருந்தனர். அப்படியிருந்தும் யாதொரு விதமான வித்தியாசமும் பாராது அப்பெரியார் வீட்டில் மூன்று நாள் விருந்துண்டுகளித்தனர். இவ்வொரு அரிய செய்கை போற்றத்தக்கதும் ஏற்றத்தக்கதுமாகும். இவ்வொரு சம்பவத்தினாலேயே இனி சாதிப்பேய் வருங்கால அறிஞர்களுக்குப் பயந்து தலைகாட்டாது ஒழியும் என்பது வெள்ளிடைமலைபோல் விளங்குகிறது. முன்கூறிய அம்மூன்று நாட்களிலும் இவ்வைவரும் பக்கத்து கிராமங்களிற் சென்று அக்கிராமப் பெரியார்களின் உதவியால் கூட்டங்கள் கூட்டி வாணிபம், வேளாண்மை, கல்வி முதலியனவைகளின் இன்பத்தைப்பற்றியும், சாதி, மதம், பிராமணீயம் முதலியனவற்றின் துன்பத்தைப்பற்றியும் எடுத்து விரிவுரை நிகழ்த்தினார்கள். இவைகளைக் கேட்டு பார்ப்பனீயம், சாதி முதலிய பழங் கொடுமைகளினின்றும் நீங்குவதாகச் சிறியோர் முதல் பெரியோர் வரை உறுதிவாக்களித்தனர். ஆகவே நம் நாட்டில் படிக்கும் வாலிபர்கள் விடுமுறை நாட்களிற் சென்று நம் பாமரர்கட்கு இத்தியாதிவிடயங்களை எடுத்துச் சொன்னால் கூடிய சீக்கிரம் நம் நாடு முன்னேறி விடுதலையடையுமென்பது திண்ணம். கடைசியாக இவ்வைந்து திராவிட மாணவர்களும் மேட்டுப்பாளையம், விளக்குடி, நீசனங்குடி, திருத்துரைப்பூண்டி, வேதாரண்யம் முதலான இடங்களிற் சென்று பிரசங்கங்கள் நிகழ்த்தி 29–ம் தேதி வியாழனன்று உரத்தநாடு திரும்பினர். அவர்களை வரவேற்றுப் பேராதரவு தந்த ஸ்ரீமான் அமிர்தலிங்க நாடார் அவர்கட்கு என்றும் மறவாத நன்றியைக் கூறுகின்றனர்.

**ஓர் உயர்தரமாணவன்,**
உரத்தநாடு.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம

மேது மின்றி யெப்போதும் மேவிவிட
த்தும் பிரிவற் நின்றியக்கஞ் செய்யுஞ்

சோதியை மாத்தா வெளியைமனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்

தீதில் பரமம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---


## நாடார்குலமித்திரன்

பிரப்வ ஞு தை மீ ௰ உ


## கதர் அபிவிருத்தி.

பண்டைக் காலந் தொட்டே சர்வ லோக மக்கள் மானங்காக்கும் ஆடை உற்பத்தித் தொழிலை அபிவிருத்தி செய்து உலகத்திற் கெல்லாம் வழங்கிய நம் பாரத நாடு யந்திர பூதங்களின் தந்திர வாய்ப்பட்டு உடல் நொந்து கடல் கடந்து செல்ல முடியாமலும், முடிவில் தன் மானங் காக்கப் பிறர் உதவி பேணும் பரிதாப நிலைமையை மகாத்மா காந்தி "உண்பதொரு படி உடுப்பது நான்கு முழம்" என்ற உபதேசத்தால் ஒருவாறு மாற்றி விட்டார்.

சென்னைக் கதர்க் காட்சியைக் கண்ட எவரும் மகாத்மா காந்தியின் பூர்வாங்கமான வேலைத் திட்டத்தைப் புகழாதிருக்க மாட்டார். இத்திட்டமென்னவென்று எள்ளி நகையாடிய சுய நல வாதிகளையுங் கூட பிரமிக்கச் செய்து விட்டது. அந்நிய ஆடையில் மோகங் கொண்ட வாலிபர்கள் பலர் உடனே கதர் மணங் கமழ்ப வருவதைக் கண் கூடாகக் கண்டோம்.

வெள்ளிப் பனிமலையின் மீதுலவு [வோம்—அடி
மேலைக் கடல் முழுதுங் கப்பல் [விடுவோம்
பள்ளித் தலமனைத்துங் கோயில் [செய்குவோம்—எங்கள்
பாரத தேச மென்று தோள் [கொட்டுவோம்

என்றும்,

பட்டினி லாடையும் பஞ்சி லுடை [யும்
பண்ணி மலைகளெனக் குவிப் [போம்
கட்டித் திரவியங்கள் கொண்டு [வருவார்
காசினி வணிகருக்கவை கொடுப் [போம்

என்றும் பாரதியார் பாடிய பாரத தேசத்தின் பூர்வீகப் பெருமையெல்லாம் விளங்கச் செய்தது. கதரை ஆதியிற் கண்டு வெருண்டவர்களும், மிரண்டவர்களும், மனமிருண்டவர்களும் சென்னைக் கதர்க் காட்சியைக் கண்டு பரவசமாயிருக்கக் கூடும். இங்கிலாந்தை வென்று, இந்தியாவை இன்புறச் செய்யும் இன்னிசைச் சக்கராயுதம் ராட்டினமே என்று மகாத்மா காந்தி சொன்ன தத்துவம் சரியாயிருக்கு மென்று கதர் அபிவிருத்தி காட்டி யிருக்கிறது. காங்கிரஸ் காரர்கள் நல்ல புத்தியுடன் மகாத்மாவின் பூரண வேலைத் திட்டத்தை ஒப்புக் கொண்டு வேலை செய்திருந்தாலும், இப்போது கதரை ஆதரிக்கிறவர்களெல்லாம் ஆதி முதல் ஆதரித்திருந்தாலும் இதை விட மேலான அபிவிருத்தி யடைந்து இங்கிலாந்தின் இறுமாப்பும் ஒருவாறு தணிந்திருக்கக் கூடும்.

அகில இந்திய நூல் நூற்பவர் சங்கத்தினாலேயே நிர்வகிக்கப்படும் கதர் ஸ்தாபனங்களின் கணக்குப்படிக்கு சென்ற வருடத்தில் 11 லட்சம் ரூபாய்க்குக் கதர் உற்பத்தி செய்யப்பட்டு 10 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. 18 ஆயிரத்து 343 பேர்கள் நூல் நூற்றும், 1581 பேர்கள் நெசவுசெய்தும் வந்திருக்கின்றனர். நூல் நூற்பவர்களுக்குச் சராசரி மாதம் ஒன்றுக்கு இரண்டரை ரூபாயும், நெசவுக்காரர்களுக்கு 25 ரூபாயும் கிடைத்திருக்கின்றன. இரண்டரை ரூபாய் வருமானத்தைக் குறித்து யாரும் கவலைப் படலாம். ஆனால் அதற்குக் கூட பிழைப் பில்லாதவர்களுக்கும் வேறு வேலைகள் செய்து விட்டு பாக்கி நேரங்களில் சோம்பியிருப்பவர்களுக்கும் இரண்டரை ரூபாய் வருமானம் வெகு உபகாரமாயிருக்கு மென்பதைச் சொல்ல வேண்டிய தில்லை. பேராசைக்காரர்களுக்கும், டாம்பீகர்களுக்கும் இவ் வருமானம் குறைவாகத் தோன்றினும் இந்திய உயிர் நாடி கதர் தான் என்பதை வெகு பேர் உணர்ந்திருக்கின்றார்கள்; உணர்ந்தும் வருகின்றார்கள். மைசூர் மகாராஜா, கதர் உற்பத்தியில் விசேஷ சிரத்தை காட்டி வருகிறார். பூரிபந்தர் சமஸ்தானாதிபதி கதர் உற்பத்தியில் முனைந்து நிற்கிறார். பம்பாய் மாகாணத்தில் ஆண்டு என்னும் சிறு சமஸ்தானாதிபதி தமது சமஸ்தானத்தில் நெய்த வஸ்திரத்தையே தாம் உடுத்தி வருவதாகவும், கையால் நூற்ற நூலைக் கொண்டு தமது சமஸ்தானத்தில் துணி நெய்து அதையே உடுத்திக் கொள்ள வேண்டு மென்று தமக்கு ஆசையிருப்பதாகத் தெரிவித்தார் என்றும் சொல்லப்படுகிறது. கனம் பனகால் ராஜாவும் கதரைப் பற்றி சிலாகித் திருக்கிறார். கதர்ச் சாலையும் திறந்து வைத்திருக்கிறார். இன்னும் இந்தியப் பொருளாதார நிலைமை சீர்ப்பட வேண்டுமானால், இந்தியா ராஜீயப் பிரசினை திருப்தியுற வேண்டுமானால், இந்தத் தேசம் எப்போதும் க்ஷேமமாக வாழ வேண்டுமானால், எல்லோரும் கதரையே உபயோகிக்க வேண்டும். இந்தியக் கவர்ன்மெண்டும் இந்தியர் லட்சியத்திற் கிணங்கி உதவி செய்யவும் வேண்டும். உலகத்தில் ஒரு பகுதியாகிய பெரிய இந்திய தேசம் சர்வ தேசத்தினராலும் வஞ்சிக்கப்பட்டு க்ஷீண திசையடைந்து விடுமானால் அதை நம்பியிருந்த இதர எல்லா நாடுகளும் நாச மடையக் கூடு மென்பதில் சிறிதும் சந்தேக மில்லை. ஆகையால் இந்தியர் மட்டு மல்ல, இந்தியாவில் வசிக்கும் எல்லாத் தேசத்தார்களுமே கதருக்கு உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

---

## குறிப்புகள்.

### சென்னைக் காங்கிரஸ்.

இக்காங்கிரஸ் நடபடிக்கைகள், தீர்மானங்கள், மற்றுமாடம்பரங்கள் முதலியவைகளைப் பற்றி ஒருவாறு முன்பே எழுதிவிட்டோம். மகாநாட்டு மா பெருந் தலைவர்களின் மணிவாசகங்களையும் முந்திய மித்திரனிலும், இப் பத்திரிகையின் மற்றொரு பக்கத்திலுமாக பிரசுரித்திருக்கிறோம். பொதுவாக காங்கிரஸைப் பற்றிப் பெரிய மேதாவிகளுடையவும் எல்லாப் பத்திரிகாசிரியர்களுடையவும் அபிப்பிராயங்கள் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக் கின்றன. சில கூலிக்கு மாரடிக்க வந்தவர்களுடைய அபிப்பிராயங்களும் அதிவேகமாய் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவைகளில் மைலாப்பூர் சங்கத்தார் தங்களுக்குச் சாதகமாயுள்ளவைகளைப் போற்றியும், ஏற்றியும், அவசரமாயும் வெளியிடுகிறார்கள். பாதகமாயுள்ளவைகளை "மறைத்தும் மறைக்கமுடியாததைச் சுருக்கியும் விடுகிறார்கள். இதில் மகாத்மாகாந்தி உள்ளதைச் சொல்லிவிட்டாரென்று அச்சங்கத்தாருக்கு உடம்பெல்லாம் எரிகிறதாம். மகாத்மா பிழை செய்துவிட்டதாக திரு. சத்திய மூர்த்தி கடற்கரையில் நின்று கத்துகிறார். "யங் இந்தியா"வில் காங்கிரஸைப் பற்றி மகாத்மா எழுதியிருப்பது கொஞ்சங்கூடப் பொருத்தமில்லையாம். காங்கிரஸ் கூட்டத்திற்காவது சபிட்டிக் கூட்டத்திற்காவது அவர் வரவில்லையாம். அவருக்கு அங்கு என்ன நடந்ததென்று கூடத் தெரியாதாம். ஆகா என்ன யோசனை! சட்கா வண்டி யோட்டுபவன்கூட வெட்கமின்றி சுயேச்சைத் தீர்மானஞ் செய்து விட்டார்களென்று எள்ளி நகையாடும்போது, இக்கட்டுப்பாடான குட்டு மகாத்மாவுக்குத் தெரியாதா? ஐயர் கண்ணை மூடிக் கொண்டால், உலகமும் இருளாகி விடுமா? அவர் கூட்டத்திற்கு வராவிட்டால் அவர் அபிப்பிராயத்தை அவர் பத்திரிகையில் எழுத உரிமையில்லையா? காங்கிரஸ் முடிவாகிற வரையும் சென்னையில் தங்கியிருக்கவும், ஒன்றும் பேசாமலிருக்கவும் தான் ஒப்புக்கொண்டிருந்தாலும், சென்னையை விட்டுப் போன பிறகுமா ஒன்றும் சொல்லக்கூடாது? காங்கிரஸைக் குட்டிச் சுவராக்கினாலும் மீண்டும் கட்டிக்கொள்ளவுங் கூடுமென்றுதான் சுயநலக்காரர்கள் குட்டிச் சுவராக்குவதற்கு ஒருவாறு இணங்கினர். காங்கிரஸில் கள்ளுக்கடை வைப்பதைப் பார்த்திருக்க அவரால் முடியுமா? யோக்கியமுள்ள மற்றெவரேனும் சம்மதிப்பார்களா? பொருட்காட்சியின் தோற்றம் கதர்க்காட்சியை எவ்வளவு பாதித்து விட்டதென்பதையும், பொருட்காட்சி இலதேல் கதர்க்காட்சி மக்கள் மனதை எவ்வாறு கவர்ந்திருக்கு மென்பதையும் ஐயர் ஒரு சிறிதேனும் உணர்ந்திருந்தால் மகாத்மாமீது சீறி விழுந்திருக்க மாட்டார். எவ்வளவு பொய்க் கோட்டைகள் கட்டினும் உண்மையை மறைக்க முடியுமா? செத்த பிணத்திற்கு எத்தனை வாசனை தீட்டினும் பிண வாடை மாறுமோ? சிறுபிள்ளைத் தனமாகச் செய்த தீர்மானங்களென்று மகாத்மா செப்பியதை உலகம் ஒப்பும் ஒப்பும்.

மகாத்மா அபிப்பிராயம் மற்றொரு பக்கத்தில் பார்க்க.

### கைமேற் பலன்.

சேலத்தில் நாளது 7-ந் உ யன்று இந்துக்கள் வழக்கம் போல் நடராஜ மூர்த்தியை ஊர்வலம் செய்துவந்ததாகவும், அதை முஸ்லீம்கள் தடுத்து கற்களெறிந்ததில் ஒரு பிரபல இந்து வியாபாரியின் இடது புருவத்தில் அடிபட்டு இரத்தம் வடிந்ததாகவும், இதைக்கண்ட இந்துக்கள் மிகக் கொதிப்படைந்ததாகவும், பின்னர் அதிகாரிகளுடைய முயற்சியின் பேரில் சம ரசமாய்ப் போய்விட்டதாகவும் சொல்லப்படுகிறது.

இதைப்பற்றிப் பல பத்திரிகைகள் சென்னைக் காங்கிரஸின் தீர்மானத்தின் பலன் சேலத்தில் கைமேற் கிடைத்துவிட்டதென்று புகழ்ச்சி மாலை சூடுகின்றன. கழுதைக்கு முன் சென்றாலும் பின் சென்றாலும் கைமேற் பலன்தரும் என்பது ஒரு பழமொழி. அப் பலன்தான் தற்போதுள்ள காங்கிரஸ் தீர்மானத்தின் மீது உண்டாயிருக்கிறதே யன்றி வேறு ஒரு நன்மையாவது நேர்ந்து விடவில்லை. அதாவது திரு. ஸ்ரீநிவாசய்யங்கார் வடமாகாணப் பிரசாரத்தில் வேதகாலத்தில் பிராமணர்கள் கோமாமிசம் புசித்ததாகப் புகன்றார். திரு. சத்தியமூர்த்தி சென்னையில் பேசும் போது வெள்ளைக்காரர்கள் தினம் ஆயிரக்கணக்கான பசுக்களைக் கொல்வதைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் முகம்மதியர்கள் கொல்லும் போது மட்டும் நாம் கடுஞ்சினமடைகிறோமென்றார். இவ்விருகனவான்களும் எவ்வளவு பொருளை உள்ளடக்கிப் பேசியிருந்தாலும் தங்கள் பொறுப்பை யுணராமல் இந்துக்கள் கொள்கைகளை அலட்சியப் படுத்தி மகமதியர்களுக்கு வக்கலாத்து வாங்கிப் பேசுவதுபோல்தானாகும். இதனால் சாதாரண முஸ்லீம்களுக்கு அதிக மிதப்புத்தான் உண்டாகக்கூடும். இவர்களுடைய சலுகை வார்த்தைகளையும் சென்னைக்காங்கிரஸ் தீர்மானத்தின் வழ வழப்பையும் அறிந்த பிறகுதான் சேலம் முஸ்லீம்கள் வழக்கமாய் வரக்கூடிய ஊர்வலத்தைத் தடுத்து விட்டார்கள். இவ்விருதாப் பாரும் விவகாரத்தை விபரீதப்படுத்திக் கொள்ளாமல் ஒத்துப்போனது மெச்சத்தக்கதாயினும், வழக்கமாய்ச் சென்று வந்ததற்கு விரோதமாகத்தான் ராசி முடிந்திருக்கிறது. ஆகையால் ஒரு சில இந்துக்கள் மனமாவது புண்படத்தான் கூடும். அடிபட்ட இந்துக்கள் மனதில் உள்ளுறப் புகைந்து கொண்டுதானிருக்கும். இதனால் தான் கழுதைக்குப் பின் சென்றாலும் தற்போதிய காங்கிரஸ்க்கு முன் சென்றாலும் பலன் ஒன்றுதான் என்று சொல்கின்றோம். சென்னையில் நடந்த தேசியத் திருவிழாவுக்குப் பிறகு தமிழ்நாட்டில் சேலத்தில் முதலாவது இந்து முஸ்லீம் வேற்றுமைவிழா அடிகோலியுள்ளது. இது மயிலை ஐயங்கார் புண்ணிய மென்றுதான் சொல்ல வேண்டும். சேலத்தார் உள்ளுறப் புகைந்து கொண்ட நெருப்புப் பற்றிக் கொள்ளாமல் மகாத்மா காந்தியின் சாந்தியில் அவிந்து போகும்படி கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

### ஆதித்திராவிடர் மகாநாடு.

சென்னையில் பல மகாநாடுகள் கூடி முடிவுற்றிருப்பதில் ஆதித்திராவிடர்கள் மகாநாடும் ஒன்றாகும். இம்மகாநாட்டின் வரவேற்புத் தலைவர் சுவாமி சகஜானந்தம் எம். எல். ஸி. அவர்களின் விரிவான சொற்பொழிவுகள் முழுதும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இவர் ஆதித்திராவிட சமூகம் க்ஷீணதிசையடைந்த காரணங்களைச் செவ்வனே துலக்கி அச் சமூகம் முன்னேற வழிகளையும் விளக்கியிருப்பதுடன், தேசத்தில் தற்காலம் தோன்றியிருக்கும் பல மாறுதல்களையும் ராஜீயப் பிரசினைகளையும் சொல்லாமல் விடவில்லை. ஜாதியில் உயர்வு தாழ்வு பாராட்டும் வர்ணாச்சிரம தர்மிகளுக்கு நல்ல சவுக்கடி கொடுத்திருக்கிறார். வேதம், புராணம், ஸ்மிருதிகளிலுள்ள ஊழல்களை யெல்லாம் வெளிப்படுத்தி பிராமணர்கள் அவர் சமூகத்திற்குச் செய்த கொடுமைகள் நன்கு துலக்கப் பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் அரசாங்கத்தாலும் பிராமணரல்லாத சமூக இயக்கத்தினாலும் அவர் சமூகம் அடைந்து வந்திருக்கும் அபிவிருத்தி பற்றிக் குறிப்பிடவும் மறந்துவிடவில்லை. பிறப்பில் உயர்வு தாழ்வு பாராட்டும் பெரிய மூடர்கள் சுவாமி சகஜானந்தம் பிரசங்கத்தை ஒரு முறையாவது படித்தாலும் உள்ளுறக் குடிகொண்டிருக்கும் அறியாமை அகன்று விடக் கூடும்.

இவர் பிரசங்கத்தை எல்லாப் பத்திரிகைகளும் வெளியிட்டு வருகின்றன. இதில் "சுதேசமித்திரன்" ஒரு

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

பிழை செய்திருக்கிறது. அதாவது ஆதித்திராவிட சமூகத்தை மேலேற விடாமல் தாழ்த்தியும், கஷ்டப்படுத்தியும், கொடுமை செய்தும் வந்தவர்களும், வருகிறவர்களும் பிறப்பினுல் உயர்வு தாழ்வு கற்பித்த பிராமணர்களும் அவர்கள் ஸ்மிருதிகளுந் தானென்று கூறியிருப்பதை சேர சோழ பாண்டிய அரசர்களால் அவர்கள் நசுக்கப்பட்டதாகச் சொல்லியது போல் "சுதேசமித்திரன்" சொல்கிறது. அதாவது, விஷ்ணு ஸ்மிருதி 5ம் பாகம் 19-23-104 பாசுரங்கள் பவுத்தாயன தூல் 1-10-8-19 பாசுரங்கள் முதலியவைகளிலுள்ள அநியாயக் கோட்பாடுகளை தெளிவுபடுத்திவிட்டு யாக்ஞவல்கியர் தாழ்ந்த ஜாதிப் பெண்ணைப் புணாம் உயர்ந்த ஜாதியானுக்குத் தண்டனைகிடையாது. இவைகள் ஒருவதப்பாருக்கு அக்கம் பேட வந்த அநீதியாகும். ஸ்மிருதிகளுடைய பாரதநாட்டை பாழ்படுத்த வந்தவைகள். ஸ்மிருதிகளை ஏற்றுக்கொண்ட அரசர்கள் ஆதிஇந்துக்களை நசுக்கிப் பாழ்படுத்தினர். கொடுங்கோல் மன்னர்களை அக்கொடுங்கோலை இந்தியாவில் இருக்க வொட்டாமல் அழித்தது என்று கூறுதல் மிகையாகாது.

இதற்கு 'சுதேசமித்திரன்' சுவாமியுடைய முழுப் பிரசங்கத்தைச் சொல்லாமலும் வேதம், புராணம், ஸ்மிருதிகளால் சேர்ந்த கொடுமைகளை விரிவாய் விளக்காமலும் சுவாமி அரசர்கள் என்று பொதுவாய்க் குறிப்பிட்டிருப்பதை மிகைப்படுத்தி எங்களை நசுக்கிய சேர சோழ பாண்டிய பாவி மன்னர்கள் அடியோடு அழிந்து போயினர் என்று கூறியதாக் குறிப்பிட்டிருக்கிறது. சேர சோழ பாண்டியர் என்று சுவாமி சொல்லாத வாக்கியத்தை மித்திரன் புகுத்தியிருப்பதானது தேனைக் குடித்து விட்டு இழிச்சவாயன் தலையற் றடவுவதை யொக்கும். ஆரியரும் ஆரிய வேதங்களும் செய்த கொடுமையை மறைத்து தமிழ்நாட்டு மன்னர்கள் மீது பழி சுமத்தும் 'சுதேசமித்திரன்' கூத்தே கூத்து! தமிழ் நாட்டரசர்கள்' தவிர இதர நாட்டரசர்கள் ஆதித்திராவிடர்களை வெகு கண்ணியமாய் நடத்துவதுபோல் 'சுதேசமித்திரன்' கனவு காண்கிறது போலும்! இச்சூட்சிகள் எல்லாம் இக்காலம் வெற்றுக்கு நிற்காதென்பதை ஆரிய மித்திரன் அறியாதிருப்பது ஆச்சரியமே.

## அதர்ம மகாநாடு.

உலக நிலைக்கேற்ற தர்மத்திற்கு மாறாக எது நடைபெறுகிறதோ, அதைத் தான் அதர்மம் என்று சொல்லப்படும். சென்ற மாதத்தில் சென்னையில் பற்பல மகாநாடுகள் உலக க்ஷேமத்தை கருதி ஒருவாறு சிறிது சிறப்பிகாமாய் நடைபெற்றிருக்கின்றன. இவைகளில் வர்ணாச்சிரம தர்ம மகாநாடும் ஒன்றே. அதைத் தான் அதர்ம மகாநாடென்கின்றோம். அதன் வரவேற்புத் தலைவரும், தலைவரும் ஆகிய செட்டியாரும் ஆச்சாரியாரும் செய்த முகவுரைக் கேற்ப 14 தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

எத்தனை தீர்மானங்கள் செய்த போதிலும், எவ்வாறு பேசிய போதிலும் கவலையில்லை. சன்மார்க்கத்தை வளர்ப்பிக்கக் கூடிய பெரிய திருவிழாக் கூட்டங்களில் திருடர்களும் கூடுவதும் அவர்கள் தொழிலை அவர்கள் செய்வதும் சகஜமாக நடைபெறுவது போலவே, ஆசார சீர்திருத்தம், ஜீவகாருண்யம், சுயமரியாதை வளர்த்தல், வாலிபர் கழகம் ஆகிய பல தர்ம மகாநாடுகள் கூடிய தருவாயில் கேவலம் மானங்கெட்ட வர்ணாச்சிரம தர்ம மகாநாடும் கூடியதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஆனால் ஜாதி பேதம் சமய பேதம் கூடாது; பிறப்பில் உயர்வு தாழ்வு கூடாது; தீண்டாமை மகா பாவம்; இந்து முஸ்லீம்கள் சகோதரர்கள் போலிருக்க வேண்டும்; இன்றே சுயராஜ்யம் வேண்டும் என்று பறையடிக்கும் தேசியப் பத்திரிகைகள் இவ்வதர்மக் கூட்டத்தார் பிரசங்கங்களையும் தீர்மானங்களையும் தாராளமாய்ப் பிரசுரம் செய்து விட்டு வாய்மூடிக் கொண்டு வாளாவிருப்பதும், பொது ஜனங்கள் இவர்களை உட்னே பைத்தியக்காரர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பக் கோராதிருப்பதும் தான் மிக ஆச்சரியமாயிருக்கிறது.

## மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களிலுள்ள பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கங்களுக்கு ஓர் வேண்டுகோள்.

மதுரை, இராமநாதபுரம் ஜில்லா பார்ப்பன ரல்லாத இளைஞர் முதல் மகாநாட்டை மதுரையில் மே மாதத்தில் நடத்துவதாக மதுரை, "பார்ப்பனரல்லாத வாலிப சங்கம்" தீர்மானித்திருக்கிறது. ஆகையால் ஒவ்வொரு பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கமும், அதனதன் அபிப்பிராயத்தை பிப்பிரவரி மாதம் 1-ம் தேதிக்குள் மதுரை "பார்ப்பனரல்லாத வாலிபர் சங்க" காரியதரிசிக்குத் தெரியப்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கே. இராமசாமி,
செக்ரெட்டரி,
"பார்ப்பனரல்லா வாலிபர் சங்கம்",
38/29 மணிநகரம், மதுரை.

## ஓர் திருத்தம்.

12—12—27-ல் வெளி யீடான மித்திரனின் 5-வது பக்கத்தில் "கனம். ராமநாதபுரம் ராஜா அவர்களுக்கு ஓர் வேண்டுகோள்" என்னும் தலைப்பின் கீழுள்ள விஷயத்தின் வாக்கிய ஆரம்பத்தில் ராஜாவே என்று விளித்திருப்பதை ராஜா அவர்களே எனத் திருத்தி வாசித்துக் கொள்ள வேண்டுகின்றனம்.

பூலோகவாசிகள் இவ்வதர்ம மகாநாட்டார் செய்த அக்கிரமமான தீர்மானங்களைப் புறக்கணித்துக் கவனியாமல் விட்டுக்கொண்டு வந்தாலும், வானவர்நாட்டில் பிரத்தியேகமாய் எட்டாவது நரகமொன்று கட்டாயம் கட்டப் பட்டக்கூடும்.

இவ்வதர்ம மகாநாட்டார் முதலாவது தீர்மானத்தில் பரம்பரையான ஜாதி தர்மங்களையும் குல தர்மங்களையும் விடாமல் வர்ணாச்சிரமதர்மானுஷ்டானத்தை ரக்ஷிக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறது. ஆனால்,

பிராமண வர்ணத்தார் சாஸ்திரங்களைப் படித்து வேறு வர்ணத்தாருக்கு அறிவுப் பயிரின் உழவராயிருந்து போதித்து வரவேண்டும். அவ்வாறு கற்பிப்பதற்குத் தமது உணவிற்கு மேற்பட்ட எவ்விதமான கூலியும் வாங்கக் கூடாது. எவன் வீட்டில் மறுநாள் ஆகாரத்திற்கு இன்றே நெல் சேர்த்து வைக்கப் பட்டிருக்கிறதோ, அவன் பிராமணன் ஆகமாட்டான் என்று யாக்ஞவல்கியர் சொல்லியிருக்கிறார்.

இந் நிய மங்களை அனுஷ்டிக்கக் கூடிய பிராமணன் தற்காலத்தில் ஒருவனுவதுண்டா? கேவலம் டாப்பர்த் தொழில் முதல் உயர்ந்த எந்தத் தொழிலையும் கழிவில்லாமற் செய்வதே பிராமணன் தொழிலாகுமென்று பிராமணர்கள் எண்ணி இடைவிடாமற் செய்யும் இக்காலத்தில் இக்கேவலமான தீர்மானம் செய்வது ஒழுங்கானுதுமா? இன்னும் விரிக்கிற் பெருகுமென்று இம்மட்டே விடுத்தாம்.

## விடு முறை.

சென்ற சங்கிராந்திப் பண்டிகையை முன்னிட்டு நம் மித்திரன் காரியாலயத்திற்கு வழக்கம்போல் விடுமுறை யாகையால், கடந்த வாரம் 16—1—28—ல் வெளியீடாக வேண்டிய பத்திரிகை நிறுத்தப்பட்டு இவ்வாரம் அநுபந்தத்துடன் வெளியிடப்பட்டிருக்கிறது. விடு முறை பற்றிய கவனிப்பின்மையால் முறைப்படியான தேதி (16—1—28) கொண்டு பத்திரிகையின் மற்றப் பக்கங்கள் அச்சாகி விட்டனவென்பதை நேயர்கள் அறிய வேண்டுகிறோம்.

## செய்தித் திரட்டு.

சமீபத்தில் சென்னை—சேப்பாக்கத்தில் இந்தியருக்கும், ஐரோப்பியருக்கும் நடந்த கிரிக்கெட் போட்டியில் இரு சாராரும் சமம் என முடிவேற்பட்டது.

* *

மதுரையில் ஸ்ரீமான் வெள்ளைச்சாமி நாடார் வீட்டில் பாட்ரிக் என்ற ராமன் என்பவன் 1410 ரூபாய் பெறுமான நகைகளைத் திருடியதாகக் கைது செய்யப்பட்டிருக்கிறான்.

* *

பெட்ரோலுக்குப் பதிலாக 'எதில்' எனும் புதியதோர் எண்ணெய்யை மோட்டார்களுக்கு உபயோகித்து வருவதற்காக 5000 மைல் தூரம் ஒடும் ஓர் நன்கு சுத்தம் செய்யப்பட்டுள்ள மோட்டாருக்கு அவ் வெண்ணெய்யை விட்டு ஓட்டிப் பரிசோதிக்க ஏற்பாடாகி வருகிறது.

* *

கவி. ரவீந்தர நாத் தாகூர் தாம் பூர்வீகத்தில் போர்த்துக்கல் தேச ரத்த சம்பந்தமுள்ளவரா யிருக்க வேண்டுமென்று அந்நிய நாடுகளில் அறிக்கைகள் வெளியாவதைக் கண்டு மனம் வருந்தி தாம் போர்த்துக்கல் ரத்த சம்பந்த முள்ளதற்கு யாதொரு ஆதாரமு மில்லையென்று கூறி இனியேனும் இவ் வாதாரமற்ற செய்தியைப் பிரசுரியாதிருக்கும்படி கேட்டுக் கொள்கிறார்.

* *

இத்தாலியில் புதிய நாணயம். ஒன்று அச்சிட ஏற்பாடான போது, அதில் வழக்கம்போல் மன்னர் தலை அச்சிடுவதை விடுத்து செலவாணி விஷயத்தில் செய்த அரிய வூழியப் பாராட்டுதலாக முதல் மந்திரி ஸ்ரீ முசோலினி தலையை அச்சிடலா மென யோசனை செய்யப்பட்டது. இது விஷயமாக ஸ்ரீ முசோலினியைக் கண்டு பேச அரசர் தன் மகனையும், மருமகனையும் அனுப்பினர். ஸ்ரீ முசோலினி அரச குமாரனை இகழ்வாயாட அரச மருகனுக்குக் கோபமுண்டாகி முசோலினியை சண்டைக் கழைக்க அவரும் இசைய வாட் சண்டை நடந்து அதில் அரசர் மருகனே வெற்றி யடைந்தார்.

* *

துருக்கி ஸ்தானத்தில் ஒரு பெரும் புயலுண்டாகி 70 பேர் மாண்டு போயினர்.

* *

காங்கிரஸ் தலைவர் டாக்டர். அன்சாரி மதனமோகன மாளவியாவுடன் ராயல் கமிஷன் பகிஷ்காரப் பிரசாரம் பொருட்டும், தேசமக்களை சுயராஜ்யத்திற்கு லாயக்குள்ளவர்களாக்கும் பொருட்டும் தேசமுற்றிலும் சுற்றுப் பிரயாணம் செய்யப்போகிறாராம். இம்மந்திரியே மௌலானா அபுல்கலாம் ஆஜாத்தும் சுற்றுப்பிரயாணம் செய்ய உத்தேசித்திருக்கிறார்.

* *

மாஜி இந்தூர் மகாராஜா ஸ்ரீமதி மில்லர் எனும் ஓர் அமெரிக்க மாதை விவாகம் புரியப் போகிறாராம். இந்நெறி தப்பிய செயலுக்கு பல பத்திரிகைகள் பலமாய்க் கண்டித்து வருகின்றன. அரசாங்கமும் அனுமதிக்கவில்லை. பெண்ணை இந்துவாக்க அதிகப் பணம் தர முன் வந்திருக்கிறார். இதறிந்த இவரின் 2-வது மனைவி ஸ்ரீமதி இந்திராபாய் மூர்ச்சியாகி விழுந்து துயரமேலிட்டு உணவொழிந்து நோய்வாய்ப் பட்டிருக்கிறார். மன்னனுக்கு நல்லமதி வரட்டும்.

* *

ஜெர்மனியில் வொயில் கிளஞ்சன் எனும் ஊரில் ஒரு இரும்புச் சாலையில் இரும்பு உருக்கும் தொட்டி வெடித்து விட, அதில் கொதித்துத் தத்தளித்துக் கொண்டிருந்த இரும்பு அத்தொழிற் சாலை பூராவும் பரவி 7 பேர் மரணமும், 16 பேர் பலத்த காயமும் அடைந்தனர். காயம் பட்டார் நிலைமையும் ஆபத்தாயே யிருக்கிறது.

* *

ஆல்பேனிய நாட்டில் ஒருவரும் ஒரு மனைவிக்கு மேல் மணந்து கொள்ளக்கூடாது எனச் சட்ட பூர்வமாய்த் திட்டம் செய்திருக்கிறார்கள்.

* *

சிதம்பரத்திற்குச் சமீபமான கொத்தங்குடி தோப்பில் கிருஷ்ணப்படையாட்சி யென்பவன் தனது வீட்டில் நகை திருட்டுப்போனதுபற்றிஜோஸ்யம் கேட்டதில்திருடியதுதனதுஅண்ணனே யென்று தெரிய வந்ததால், சந்தேகம் நீடித்து தமையனுடன் சண்டை செய்து அவனைக்குத்திக் கொன்று விட்டானும்.

* *

சின்னாட்களுக்கு முன்னர் பூகம்பத்திலும் அசைக்கவியலாதவாறு பாதான ரயில்வே ஒன்று முதன் முதலாக ஜப்பானில் திறந்து வைக்கப் பட்டது.

* *

அமெரிக்காவில் மோட்டார் லைசென்ஸ் தரும் அதிகார ஆபீஸில் ஒரு மேஜை யிருக்கிறது. அதில் பல சந்து பொந்துகள் மூலை முடுக்குகள் கட்டங்கள் முதலியன அமைக்கப்பட்டிருக்கின்றன. வண்டி யோட்ட லைஸென்ஸ் விரும்புவோர் ஒருபொம்மை மோட்டாரை மேற் கூறிய விடங்களில் சமர்த்தாகவோட்டிக்காண்பிக்க வேண்டும்.

* *

ஹைதராபாத்தில் பிளேக் நோய் அதிகமாய்ப் பரவி வருவதால் அனேகர் வெளியேறி விட்டனர்.

* *

சில தினங்களுக்கு முன் இரங்கூனினின்றும் புறப்பட்டு மேலே சென்று கொண்டிருந்த ஆகாயக் கப்பலொன்றில் ஓர் பாம்பு கிடந்ததாம். அதைச் சிரமப்பட்டு அடித்துக் கொன்றார்களாம்.

* *

1952-ம் ஆண்டுக்குள் உலகில் ஒருவரும் மதுபானம் செய்யமாட்டாரென மதுவிலக்குப் பிரசாரகர் ஸ்ரீ பூஸிக்கால் ஜான்ஸன் கூறுகிறார்.

* *

அலகாபாத் ஜில்லாபோர்டு தேர்தலில் ஆள் மாறாட்டம் செய்த குற்றத்திற்காக சட்டசபை யங்கத்தினர் ஸ்ரீ சௌரிபாதம் 3 மாதக் காவல் தண்டனை யடைந்தார்.

* *

மனிதரின் ஜீவிய காலத்தை நீடித்திருக்கச் செய்யும் உபாய ஆராய்ச்சி செய்வதற்கு அமெரிக்கப் பிரபு ஸ்ரீ ஆல்பர்ட்வாங்கனும், அவர் பாரியுமாக சிகாகோ சர்வகலாசாலைக்கு 10 லட்சம் டாலர் உதவியிருக்கிறார்கள்.

* *

சிறிது காலத்திற்கு முன்பு கார்டிப் என்ற நகரத்தில் 12 அவுன்ஸ் நிறையுள்ள ஓர் குழந்தை பிறந்தது. இது உலகத்திலேயே எல்லாக் குழந்தைகளையும் விட குறைந்த எடையுடையது. இது நீண்ட நாள் உயிர் கொண்டிராது என நிகழ்த்தப்படுகிறது.

* *

பம்பாயில் இரண்டு வாரங்களுக்குள்ளாக ஒரு சிறு குழந்தை தவறி சாக்கடையில் விழுந்துவிட தண்ணீர் அடித்துக் கொண்டு சென்றுவிட்டது. குழந்தையின் அழுகுரலைக் கேட்டு பொது ஜனங்களும் போலீஸாரும் ஒரு கயிற்றில் ஒரு உருளைக் கிழங்கைக் கட்டி சாக்கடைக் குழாய்க்குள் விட்டு பின்னை கிடைப்பதையறிந்து அவ்விடத்திருந்த சுவரை யிடித்துப்பார்க்கக் குழந்தை உயிரோடு மண்ணில் அழுந்திக் கிடந்தது. உடனே தூக்கி வைத்தியசாலைக்குக் கொண்டுபோய் சிகிச்சைசெய்து சுகப்படுத்தினர்கள்.

* *

இங்கிலாந்தில் லார்டு ஜொஸ்ஸ் என்னும் பிரபு யுத்தஞாபகச் சின்னமாக ஓர் தர்ம வைத்திய சாலையைத் திறந்து வைத்து 'இந்த நாளைப்பார்க்கும் வரையில் என்னை உயிருடன் வைத்திருந்த இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன்' என்று சொல்லி உடனே கீழே விழுந்து உயிர் துறந்தாராம்.

* *

இங்கிலாந்தில் இந்திய வெள்ளச் சேதநிதி வசூல் முடிவுற்றது. மொத்தம் ரூ 1435—12—0 வசூலாகி யிருக்கிறது. இதற்கு சமமான தொகை நமது அரசபெருமானும் சொந்த ஹோதாவில் உதவியிருக்கிறார். இவ்வசூல் தொகை யுபயோக வகையை பம்பாய்க் கவர்னர் யோசனைக்கு விடப்பட்டிருக்கிறது. இப்பணம் பம்பாய், பரோடா, ஒரிஸா முதலிய நிதிகளுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்படும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நாடார் குல கனவான்களுக்கும், சங்கங்களுக்கும் ஓர் விஞ்ஞாபனம்.

சென்ற 15—12—26ல் கூடிய திருவாரூர் நாடார் சங்கத்தின் பொதுக் கூட்டமொன்றில் இச்சங்கத்தின் அக்கிராசனர் ஸ்ரீமான் வெ. சாமிநாத நாடாரவர்களை நமது பிரதிநிதியாக இவ்வூர் முனிசிபல் சபையின் அங்கத்தினராக கவர்ன்மெண்டார் நியமிக்கவேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதன் நகல்கள் கவர்ன்மெண்டாருக்கும், கனம் மந்திரி அவர்களுக்கும் அனுப்பப்பட்டன.

ஸ்ரீமான் வெ. சாமிநாத நாடார் அவர்களைப்பற்றி அறியாதார் யார்? நம் குலம் முன்னேற்றமடைய அன்னார் செய்திருக்கும் பேருதவிகளைக் குறித்து பத்திரிகை படிக்கும் ஒவ்வொரு கனவானும் நன்கு அறிந்திருக்கக்கூடும். எனக்குத் தெரிந்தவரையில் ஷையார் பொதுக் காரியங்களில் 1920-ம் ஆண்டு முதல் ஈடுபட்டு உடல், பொருள் இவ்விரண்டையும் நமது நாடார் குலத்தினரின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணம் செய்துவருகிறார். ஏழைமாணவர்களின் ஸ்காலர்ஷிப் லாட்டரியில் அன்னார் எடுத்துக்கொண்ட பிரயாசையையும், விற்பனை செய்யப்பட்ட டிக்கெட்டுகள் மூலமாக இவ்வூர் சம்பந்தப் பட்டமட்டில் வெற்றி பெறும்படிக்கு அவர் செய்த ஊழியத்தையும் ஒருவரும் பாராட்டாமலிருக்க முடியவில்லை. மேலும் கும்பகோணத்தில் நடைபெற்ற நமது 11-வது மகாநாடு விஷயமாக வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் சி. வெ. ரத்தினசாமி நாடார் அவர்களுடையவும் பொதுக் காரியதரிசி ஸ்ரீமான் சுடலை முத்துநாடார் அவர்களுடையவும் வேண்டுகோளுக்கிணங்கி நாகபட்டணம், மாயவரம், நன்னிலம், திருத்துறைப் பூண்டி முதலிய தாலுக்காக்களில் பிரசாரம் செய்து ஏராளமான டிக்கட்டுகளை விற்பனை செய்துகொடுத்து 11-வது மகாநாட்டைச் சிறப்புறச் செய்த கனவான்களில் இவரும் முக்கியமான ஒருவரன்றோ! தவிர 11-வது மகாநாட்டில் 8-10-27-ல் நிர்வாகசபை அங்கத்தினர்களின் தேர்தல் நடைபெற்ற காலையில் சபையில் கோரமில்லாமல் போகவே தஞ்சை ஜில்லா நாடார் சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் எஸ். கே. ராமசாமி நாடார் அவர்களுடன் சேர்ந்து சபைக்கு ஒரு ரூபாய் சந்தா செலுத்தும் அங்கத்தினர்களைச் சேர்த்து யாதொரு தகராறும் ஏற்படாமல் அமைதியை நிலவச் செய்தது யாரென்று நீங்கள் நினைக்கிறீர்கள்? அன்னார் நமது வெ. சாமிநாத நாடார் அவர்கள் தான் என்பது மகாநாட்டுக்கு விஜயம் செய்திருந்த கனவான்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

ஏற்கனவே இவ்வூர் சங்கத்தின் தீர்மானத்தை அனுசரித்து மகாஜனங்கள் மகஜர் மூலமாகவும் மனுக்களின் மூலமாகவும் ஸ்ரீமான் நாடார் அவர்களை முனிசிபல் சபைக்கு அங்கத்தினராக நியமிக்கும்படி கலெக்டர் துரையவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். ஸ்ரீமான் நாடாரவர்கள் கலெக்டர் துரையவர்களை நேரில் பேட்டி கண்டு தன்னுடைய பெயரை கவர்ன்மெண்டாருக்குச் சிபார்சுசெய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். 11-வது நாடார் மகாநாட்டிலும் நமது ஸ்ரீமான் நாடார் அவர்களின் ஊழியத்தைப் பாராட்டி அதற்காக அன்னாரை திருவாரூர் முனிசிபல் சபையின் அங்கத்தினராக நியமிக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டாருக்கு சிபார்சு செய்து ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடார் எம். யல். வி. அவர்களால் ஒரு தீர்மானம் பிரேரிக்கப்பட்டு அந்தத் தீர்மானம் ஏகமனதாக ஆமோதிக்கப்பட்டது. நமது சங்கக் காரியதரிசி மூலம் ஷை தீர்மானத்தின் நகல்கள் கலெக்டர், கவர்ன்மெண்டார், கனம் மந்திரி முதலியவர்களுக்கும் அனுப்பப்பட்டன. ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடார் யம். யல். வி. அவர்களும் நமது [illegible] களைப் பற்றி கனம். மந்திரி [illegible] கனக்கு சிபார்சு செய்தார்கள்.

மேற்சொன்ன நடவடிக்கைகளினால் ஸ்ரீமான் வெ. சாமிநாத நாடார் அவர்களைத் திருவாரூர் முனிசிபாலிடி சபையின் அங்கத்தினராக கவர்ன்மெண்டார் நியமித்து 25-10-27ல் பிரசுரமாகிய போர்ட்டு ஸெயிண்ட் ஜியார்ஜ் கெஸட்டில் அவரது பெயரையும் பிரசுரம் செய்தார்கள். அம்மாதிரி பிரசுரம் செய்யப்பட்டதில் ஸ்ரீமான் நாடார் அவர்களின் முதலெழுத்து "வீ" என்பதற்குத் தவறுதலாக எஸ். என்று பிரசுரமாயிருந்தது. அந்தத் தவறுதலை திருத்தி வெற்றிவேல் நாடார் மகன் சாமிநாத நாடாரென்று திருத்தியமைக்கும்படி கனம் முதன் மந்திரியவர்களைக் கேட்டு உத்தரவு வாங்கும் படிக்கு சென்னை ஹைக்கோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் எ. வி. விசுவநாத சாஸ்திரி அவர்களுக்கு நமது நாடார் வக்காலத்து கொடுத்ததின் பேரில் ஸ்ரீமான் சாஸ்திரி அவர்களும் கனம் முதன் மந்திரி அவர்களிடம் ஆஜராகி மனுவைத் தாக்கல் செய்தார். கனம் மந்திரி அவர்களும் அதற்கு இசைந்து அவ்வாறே முதலெழுத்து "வீ" என்று திருத்தி அவ் விஷயத்தையும் தந்தி மூலமாக இவ்வூர் முனிசிபல் கவுன்சிலுக்கு அறிவித்தார்.

உலகத்தில் ஒருவன் பெருமை அடைவதைக்கண்டால் அதைப்பற்றி ஜனங்கள் பொறாமைப்படுவது சகஜமே. அது போல நமது நாடாருடைய பெருமையைக் கண்டு பொறுக்க மாட்டாமல் விரோதிகள் கிளம்பிவிட்டார்கள். 8-11-27-ல் நடைபெற்ற இவ்வூர் முனிசிபல் அக்கிராசனர் தேர்தல் கூட்டத்திற்கு முதல் முதலாக நமது வெ. சாமிநாதநாடார் வந்திருந்தார். ராஜவிசுவாசப் பிரமாணம் செய்ய நமது நாடார் முயன்ற பொழுது விரோதிகளான சிலர் உலக அனுபவம் சற்றும் அறியாத விநாயகமூர்த்தி நாடார் மகன் சாமிநாத நாடாரென்னும் சுமார் 19-வயதுள்ள ஒரு சிறுவனைக் கொண்டுவந்து அங்கே நிறுத்தியிருந்தார்கள். தான் தான் "வீ" சாமிநாதநாடார் என்பவனென்றும் தான் தான் முனிசிபல் சபையில் நியமனமாகியிருக்கிறதாகவும் தெரிவிக்க அந்தக் கூட்டத்திற்கு அக்கிராசனம் வகித்த வைஸ் சேர்மென் ஸ்ரீமான் ஈசுப்பு ராவுத்தர் நமது வெ. சாமிநாதநாடார் அவர்களை நன்கு அறிந்திருந்தும் ஒரு ஸ்தானத்திற்கு இரண்டு அபேக்ஷகர்கள் வந்திருப்பதால் கவர்ன்மெண்டாருடைய அனுமதி அன்னியில் தாம் ஒருவரையும் அனுமதிக்க முடியாதென்று கூறிவிட்டார். நமது நாடாரவர்களுக்காக ஸ்ரீமான் வெ. வெங்கடாச்சாரியார் அவர்கள் வக்கீலாக ஆஜராகி வெகு நேரம் வாதித்தும் ஒன்றும் பயன்படவில்லை. நமது நாடாரவர்களின் விரோதிகள் இத்துடன் நின்றுவிடாமல் மேலாவுக்குப்போய் எந்த விதமான சிபார்சினாலோ 22-11-27ல் பிரசுரமான கெஸட்டில் எஸ்ஸைத் திருத்தி விநாயகமூர்த்தி நாடார் மகன் சாமிநாத நாடாரென்று பெயரை பிரசுரம் ஆகும்படி செய்து விட்டார்கள்.

ஒரு சமயம் கவர்ன்மெண்டார் மேற்கண்டபடி நமது வெ. சாமிநாத நாடார் அவர்கள் பெயருக்குப் பதிலாக தவறுதலின் பேரில் விநாயகமூர்த்தி நாடார் மகன் சாமிநாத நாடாரின் பெயரை பிரசுரிக்கும்படி செய்திருக்கலாமென்று, அவ்வாறு செய்திருப்பதைத் திருத்தி வெற்றிவேல் நாடார் மகன் சாமிநாத நாடாருடைய பெயரை மறுபடியும் பிரசுரம் செய்யுமாறு கவர்ன்மெண்டாருக்கு நோட்டீஸ் கொடுக்கப் பட்டிருக்கிறது. அம்மாதிரி நமது வெ. சாமிநாத நாடார் பெயரை கவர்ன்மெண்டார் மறுபடி பிரசுரிக்காவிடில் இது விஷயமாக ஒரு வியாச்சியத்தை கவர்ன்மெண்டார் மீது செய்ய எத்தனித்திருக்கிறோம். இது விஷயத்தை நமது குலத்தினர் நன்கு ஆலோசித்துப் பார்த்து பிறகு நமது சுயமரியாதையைக் காத்துக் கொள்ளுவதற்கு உதவி புரிய முன்வர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சென்ற 4-12-27ல் நடைபெற்ற கனவர் மகாஜனசங்கத்தின் கூட்டத்தில் ஸ்ரீமான் ஆர். எஸ். சர்மா சி. ஐ. யி. [illegible] முனிசிபல் சபையின் அங்கத்தினர் [illegible] மனத்தில் முதலில் ஒருவரை நியமிக்க நாடார் சங்கம் சிபார்சு செய்து பிறகு அதே ஸ்தானத்திற்கு முன் சிபார்சு செய்தவரை ஒதுக்கிவிட்டு வேறொருவரை நியமிக்க ஏற்பாடுகள் செய்திருப்பதுபோல் நீங்களும் செய்யாமல் உங்களுடைய பிரதிநிதிகளை ஒழுங்காகப் பார்த்துத் தேர்ந்தெடுப்பதுடன் அவர்களைப் பற்றி கவர்ன்மெண்டாருக்கு சிபார்சு செய்தவுடன் பிறகு சில்லரைக் காரணங்களினால் கைவிட்டு விடாமல் பூராவும் அவரையே ஆமோதிக்க வேண்டுமென்று" பேசி யிருப்பதை நீங்கள் 7-12-27 சுதேசமித்திரன் 11-வது பக்கத்தில் படித்திருக்கலாம். இதைக் காட்டிலும் இகழ்ச்சி என்ன வேண்டும்? எமது குலாபிமானிகளே! எமது அருமைச் சகோதரர்களே!! நீங்கள் எல்லோரும் முன் வருவீர்களாக. நம்முடைய சங்கத்தின் கௌரவத்தைக் காப்பாற்ற பேருதவி புரிவீர்களாக.

இதைக் கண்ணுறும் எல்லா நாடார் கனவான்களும் தங்கள் அபிப்பிராயங்களைக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அறிவிக்கக் கோருகின்றேன்.

விலாசம்:—

மு. ந. ந. சின்னச்சாமி நாடார்,
காரியதரிசி,
"திருவாரூர் நாடார் கூட்டுறவு சங்கம்",
திருவாரூர்.

## கிறிஸ்துநாதர் பிறந்த தினக்கொண்டாட்டம், கொழும்பு.

மன்னுலகத்தன்னில் மானிடரை மீட்க மாமரியின் உதரத்தில் மனுவுருவாய் தரித்த இயேசுவின் ஜெனன திருவைபவக் கொண்டாட்டத்தை பல இடங்களிலும் சிறப்பித்துக்கொண்டாடி வருகிறார்கள். இக்காலே இவ்வருடம் இவ் விலங்கை வாழ் நாடார் குல மக்களில் பலர் வெகு பிரபல்யமாகக் கொண்டாட வேணுமென்பதற்கிணங்க சில மதகுலாபிமானிகளினுதவியாலும், விசேஷமாய் வடக்கன்குளம் ஸ்ரீமான் ஐ. ம. மரியமிக்கேல் நாடாரவர்கள், கன்னிகுளம் ஸ்ரீமான்களான வி. மி. மிக்கேல் நாடாரவர்கள், வி. மி. யேசுவடிய நாடாரவர்கள் ஆகிய இவர்களுடைய பெரும் பொருளுதவியாலும், அரும்பிரயாசையாலும், ஐட்பார்க் கோணர் 2-20 கிர் ஸ்ரீமான் ஐ. ம. ம. கட்டடத்தில் 26—12—27-ல் மாலை 6-30-மணிக்கு சங்கீத சாகித்திய வித்துவ ரத்தின ராஜா வி. எ. சின்னமணி பாகவதரவர்களால் சங்கீதக்கச்சேரி நடைபெற்றது. அவ்வமயம் ஏராளமான ஜனங்கள் விஜயஞ் செய்தனர். குலாபிமானமே உயிராய்க்கொண்ட அவ்விளஞ் செந்தினினிய குரலால் பாடப்பட்ட 'யேசுநாயகமே' எனும் கீர்த்தனைப்பாடலும் இதுபோன்ற மற்றைய பாக்களும் அவண் விஜயம்செய்துள்ள கனவான்கள் யாபேருடைய மனதையும் கசிந்துருகச்செய்தன வென்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீமான் பாகவதரவர்களுக்கு பொருளுதவிய புண்ணிய சீலர்களின் சார்பாக ஸ்ரீமான்களான ஐ. ம. மரியமிக்கேல் நாடாரவர்களால் விலையுயர்ந்த பட்டுச்சால்வையும், வி. மு. யேசுவடிய நாடாரவர்களால் சில பரிசுகளும் அளிக்கப்பட்டன. இப்பரிசுகளை அன்போடேற்ற ஸ்ரீமான் பாகவதரவர்கள் அக்கணமே சமயமாக அச்சபையின் சிறப்பையும் அதற்குதவியளித்துள்ள கனவான்களின் அன்பையும் அதற்குயிராய் நின்ற ஸ்ரீமான்கள் ஐ. ம. மரியமிக்கேல் நாடாரவர்களையும், வி. மி. மிக்கேல் நாடாரவர்களையும் ஒருங்கே அமைத்து உடுமலையின் முத்துச்சாமி—என்ற மெட்டில் ஒரு புகழுரைப்பாடல் இனிமையாகப் பாடினர். சங்கீதக் கச்சேரி வெகு விமரிசையாய் நிறைவேறியது. இப்பெரும் உற்சவத்தை இவ்வருடம் போல அதிவிமரிசையாய் வருடந்தோறும் நடத்துமாறு வல்ல இறைவன் அருள் புரிவாராக.

கே. எம். தேவசகாய நாடார்.

## சீர் திருத்துங்கள்.

இக் காலில் ஹிந்து மத சம்பந்தமான தர்ம ஸ்தாபனங்களெல்லாம் பெரும்பாலும் சீர்கேடுற்றே யிருக்கின்றன. அவைகளை யெல்லாம் சீர் திருத்த வேண்டியது இந்துக்களின் முக்கியமான கடமையாகும். அவைகளைச் சீர் திருத்துவது, இந்து சமயத்தைப் பெரிதும் வளரச் செய்வதாகும். வேத ஆகம தேவார பாடசாலைகள் முதலியனவைகளிற் பயிலும் மாணவர்களனைவருக்கும், வருஷத்திற்கு ஒரு முறை அவசியம் பரீக்ஷை வைத்துத் தேறுபவர்களுக்குப் பரிசு கொடுத்தல் வேண்டும். கடைசியில் படிப்பு முடித்த வுடன் யோக்யதா பத்திர மளித்தல் வேண்டும். இவைகளோடு தமிழ் இலக்கிய இலக்கணக் கல்வியும் சிறிது போதிக்கப் பெறல் வேண்டும். பையன்களுக்கு அன்ன வஸ்திர மளித்துக் காப்பாற்றுதலை மட்டும் முக்கியமானதாகக் கருதாது, கல்வி யபிவிருத்தியிலும் சிறந்த கவனம் செலுத்துதல் வேண்டும். மற்ற கலாசாலைகளைப் போல் இவற்றையும் ஒழுங்கான முறையில் நன்கு நடத்துதல் வேண்டும். வருஷக் கணக்காகப் பாடசாலையிற் பயின்று கொஞ்சமும் அபிவிருத்தியடையாது இருக்கும் அசட்டுப் பையன்களை யெல்லாம் மேலும் வைத்தாதரித்தல் கூடாது. இவர்களை ஆதரிப்பதினாலேயே இப்பாடசாலைகளெல்லாம் சோற்றுச் சாலைகளாகவும் சோம்பேறி மடங்களாகவும் விளங்குகின்றன. உபாத்தியாயர் நினைத்த நேரத்தில் வீட்டு வேலையொழிந்த பொழுது வந்து பாடஞ் சொல்லுதல் ஆகாது. உரிய காலத்திலேயே வருதல் வேண்டும். இனி, அன்ன சத்திரங்களிலும் மடங்களிலும் சில ஜாதியாருக்கு மட்டும் அன்னமளித்தல் என்பதைத் தவிர்த்து ஏழை மக்களனைவருக்கும் ஈதல் வேண்டும். நோயாளிகள், தங்க வீடிலார்கள், வயது சென்றவர்கள் முதலியவர்களை நன்கு உபசரித்தல் வேண்டும். வெறுங்காலாக அலைந்து கொண்டிருக்கும் வீண் சோம்பேறிகளுக்குச் சோறிடுதல் கூடவே கூடாது. பசு மடங்களில் வயது சென்ற மாடுகளை அடி மாட்டிற்கு விற்று விடாது வைத்துப் பரிபாலித்தல் வேண்டும். நந்தவனத்திலுள்ள புஷ்பங்களை எடுப்போர் விலைக்கு விற்று விடாதபடி கவனித்தல் வேண்டும். திருக்கோயில்களிலே நடாத்தும் கட்டளைகளையும் செம்மையாக நடக்கும்படி செய்தல் வேண்டும். செல்வர்கள் தர்ம ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதில் எவ்வளவு சிரத்தை எடுத்துக் கொள்ளுகிறார்களோ, அதற்குப் பன் மடங்கதிகமான சிரத்தையின அவைகளைப் பரிபாலிப்பதில் செலுத்துதல் வேண்டும்.

ஹிந்து மதாபிமான சங்கம்,
காரைக்குடி.

## பிள்ளைத்தோப்பு.

### ஆகாயக் கப்பற காக்ஷி.

திருவாங்கூரைச் சார்ந்த பிள்ளைத் தோப்பு எனும் ஊரின் கடற்கரை ஓரமாக சுமார் 20-ஜெஜம் உயரத்தில் மேற்கிலிருந்து கிழக்குப்பக்கமாக நாலு ஆகாயக் கப்பல்கள் 31—12—27-ல் பகல் 10-மணிக்குப் பறந்து சென்றன. ஏரான மானஜனங்கள் இவ்வதிசயத்தைக்கண்டு மகிழ்ந்தார்கள்.

### பனைமேற் பனைகள்.

டைுரில் கல்கட்டி ரோடுக்கு மேல்புறம் ஒருபனைமரமிருக்கிறது. அதன் உயரம் சுமார் 5-ஜெஜமிருக்கும். அதன் மேல் 21—பனைகள் கிளைகள்மாதிரி உண்டாகியிருக்கின்றன. அப்படி முளைத்திருக்கும் ஒவ்வொரு கிளை மரமும் 4-ஜெஜம் நீளமிருக்கும். வெளியூர் ஜனங்கள் இதை ஆச்சரியமாகப் பார்த்துப் போகிறார்கள்.

யஸ். பி. பி. செல்லத்துரை நாடார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## இன்ப வாசகம்.

சங்கீதமே இனிமை சார்ந்தது என்ப தோர்முடிவு. ஆனால் அதைக்காட்டிலும் அன்பர்களின் வார்த்தைகளில் இனிமை மிகுதியாகத் ததும்புகிறது.

* *

முயற்சி யென்னும் திரியும், ஊக்க மென்னும் மெண்ணெய்யு மின்றேல், முன்னேற்ற மென்னும் தீபமெரியாது.

* *

பெரிய குடத்தில் சிறு துவார மிருக் தாலும், அதிலுள்ள தண்ணீர் ஒழுகி விடும். அஃதே போல முன் ஆயிர மாயிரமாய்த் தேடி வைத்திருந்த பெருமைகளெல்லாம் ஒரு சிறிது தீச் செயல் நேசத்தினால் குன்றி விடும்.

* *

கரையான்கள் பல கூடி பிரமாண்ட மான கட்டைகளையும் சிறு சிறிதாக அரித்து ஒன்று மின்றியாக்கி விடுகின் றன. இவைகள் பெரிய புத்தகங்களை யும் விடா முயற்சியினாலும், தளரா வூக்கத்தினாலும், பரஸ்பர ஒற்றுமை யினாலும் உண்டாக்கி விடுகின்றன. ஒற்றுமை யோங்கின லெதிரிக ளோங்கு வர். நலமும், பலமும் ஒற்றுமையின் செய்கள்.

* *

புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது. பெரியோர்கள் கெட்டாலு மன்பு நெறி வழுவார்கள். மேன் மக்கள் மேன் மக்களே. கீழ் மக்கள் கீழ் மக்களே.

* *

பூரண கவன மின்றி செய்யும் காரியங் களிலிருந்து பூரண பலனை எதிர் பார்ப் பது களையெடாது விளை பலன் பார்ப் பதே யாகும்.

* *

சிறிய துக்க விஷயத்தையும் மன தால் பெருக்கிப்பெரியதாக்கி தினசரி வாழ்க்கையில் பலர் ஏக்க மடைகின்ற னர். ஆனால் பெரிய விஷயத்தையும் சிறிதாக்கி மன சமாதான மடைவதே மேன்மை. சிந்தனையில் சேர்க்கும் போது சிறிய விஷயத்தையும் பெரிதாக உண்டாக்கியே யோசிக்க வேண்டும்.

* *

நிதான மற்ற விடத்தில் திடீரென தோன்றும் மிகுந்த சந்தோஷமும், பெருந் துக்கமும் உயிரைக் கூட விழுங்கிவிடும்.

* *

சுர முன்னவர்களுக்கு வரும் சூடான பெரு மூச்சைக் காட்டிலும், பொறு மையுள்ளவர்களுக்கு மூச்சு மிக உஷ்ண மாகவெளிக்கிளம்புகிறது.

* *

சந்தர்ப்பங் கவனியாது சொல்லும் சில வார்த்தைகள் நெருப்பில் போடப் படும் உப்பைப் போல் தீமையைச் சிருஷ்டி செய்கிறது.

* *

மனது காமல்ல; அது நம துபயோ கத்திற்காக வைத்துக் கொள்ள வேண் டிய ஒரு வேலை செய்யும் கருவி. மனிதத் தன்மையிலிருந்து தவறுதார்க்குக் கடவுளால் பரிசளிக்கப் பட்ட உண்மை ஊழியன்.

* *

மக்கள் அன்பு நெறி வழுவா தேகுவ தற்காக நாடகம், நாவல் முதலியவை கள் முதலி லுண்டாக்கப்பட்டவை. இவைகளுக்கு நீதிகளும், ஒழுக்கங் களுமே ஜீவனாக விருந்தன. ஆனால் தற்காலம் அநேகமா யிவைகள் தீமை களுக்கு வழி காட்டிகளா யிருக்கின்றன.

* *

ஒருவன் தன்னைக் கொலை செய்ய வரும் வாளை வெறுப்பது குற்றமாகும். ஏனெனில் அதைஉபயோகிப்பவன் கார ணஸ்தனாதலால் அவனே குற்றத்திற்குப் பாத்திரமானவன். மேல் விழும் கல் குற்ற மற்றதைப் போல தூதனும் களங்க மற்றவனே.

* *

உலகத்தை உயிர்ப்பிக்கும் மழையும் நிதான மின்றிப் பெய்து விட்டால் தீமையே முளைக்கும்.

* *

இயற்கை இன்ப வாழ்வைப் பரிசளிக் கிறது. ஒழுக்கம் சிம்மாசனத்தி லுட் கார வைக்கிறது. கல்வியும், செல்வ மும் கிரீடத்தை தலையில் சூட்டு கின்றன.

அ. கு. அண்ணாமலை.

## ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

### பாகம் 4. அத்தியாயம் 32.

#### போதகாசிரியர்.

நான் இந்த அத்தியாயங்களில் தென் னாப்பிரிக்கா சத்தியாக்கிரக சரித்திரத் தில் கூறத் தவறியவைகளையும், மேற் போக்காகக் கூறியவைகளையும் மட்டும் எழுதிக் கொண்டு வருகிறேனென்பதை வாசகர்கள் ஞாபகத்திலிருத்திக் கொண் டால், அவர்கள் இவ்வத்தியாயங்களின் சம்பந்தா சம்பந்தங்களை நன்கு அறிந்து கொள்ளக் கூடுமென்றே நம்புகிறேன்.

எங்களுடைய பண்ணை நாளடைவில் பெருகி விட்டபடியால் அங்குள்ள பிள்ளைகளுக்குக் கல்வி கொடுப்பதற் கேற்ற வசதியைத் தேட வேண்டிய அவசியம் நேரிட்டது. அங்கேயோ ஹிந்து, முஸ்லிம், பார்சி, கிறிஸ்தவப் பிள்ளைகள் இருந்ததுடன் சில ஹிந் துப் பெண்களும் இருந்தார்கள். அவர்களுக்காகப் பிரத்தியேக போத காசிரியர்களை நியமிக்க வேண்டு மென்று நான் கருதவு மில்லை; அவ் வாறு நியமிப்பதற்குத் தக்க வசதியு மில்லை. மேலும் பரீக்ஷைகளில் தேறிய உபாத்தியாயர்கள் அங்கே கிடைப்பது அருமையாக இருந்ததுடன், கிடைக் கும் ஒருவர் இருவரும் குறைந்த சம்ப ளத்தில் தர்பனிலிருந்து 21 மைல் தூரத்திலுள்ள அப்பண்ணைக்குவர விரும்பவு மில்லை. அன்றியும் எங்களிட மும் அதிக பணம் இருக்க வில்லை. முக்கியமாக நான் வெளியிலிருந்து உபாத்தியாயர்களைத் தருவிக்கவும் விரும்பவில்லை. இப்போதுள்ள கல்வி முறையில் எனக்குச் சிறிதும் நம்பிக்கை கிடையா தாதலின் நானே அனுபவத் தின் மீதும், சுய அனுஷ்டானத்தினா லும் தக்க உண்மையான முறையைக் கண்டு பிடிக்க விரும்பினேன். மேலும் பிள்ளைகளுக்கு உண்மையான கல்வி யைப் போதிக்க அவர்களுடைய பெற் றோர்களால் தான் முடியு மென்பது எனது அபிப்பிராயம். ஆதலின் வெளி யுதவி அதிகம் கூடா தென்றும் முடிவு செய்தேன். எனினும், அந்த டால்ஸ் டாய் பண்ணை ஒரு குடும்பத்தைப் போலிருந்தது. நானே அக் குடும்பத் தின் தந்தையின் ஸ்தானத்திலிருந் தேன். ஆதலின் அங்குள்ள வாலிபர் களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டிய பொறுப்பு என் மீது சார்ந்து விட்டது.

அங்கே கூடியிருந்த வாலிபர்களெல் லாம் அவர்கள் பிறந்தது முதல் என் னுடன் இருந்ததில்லை. அவரவரும் தனித்தனியான இடங்களில் வளர்ந் தவர்கள். மேலும் அவர்களனைவரும் வெவ்வேறு விதமான சுக சௌகரியங் களிலும், அனுஷ்டானங்களிலும் வளர் ந்தவர்கள். அன்றியும் அவர்கள் பல விதப்பட்ட மதத்தினராகவும் இருந்தார் கள். எனவே இப்படிப்பட்ட முறை யில் கூடிய அங்குள்ள வாலிபர்களை நான் எவ்வாறு திருப்தி செய்ய முடி யும்?

நான் எப்போதும் மன ஆராய்ச்சிக் கும், நற்குண நல்லொழுக்கத்துக்காக வுமே பாடு படுகின்றபடியாலும், அவை களையே நான் மதிக்கின்றபடியாலும் எல்லா மாணவர்களுக்கும் வித்தியாச மில்லாமல் அந்த ஒழுக்கத்தை மட்டும் ஒரே மாதிரியாகக் கற்பிக்கலாம் என் னும் நம்பிக்கை எனக்கு இருந்தது. ஆதலின் நான் ஒரு தினத்தின் 24 மணி நேரமும் அவர்களுடைய மத்தி யிலேயே அவர்களுடைய தந்தையாக இருப்ப தென்று தீர்மானித்தேன். நான் நற்குணம் அமைவதே நல்ல கல்விக்கு அஸ்திவாரம் என்று கருதிய தால் அந்த அஸ்திவாரம் அமைக்கப் பட்டால் மாணவர்கள் இதர விஷயங் களைத் தாங்களாகவோ அல்லது தங்க ளுடைய நண்பர்களின் துணையினாலோ கற்றுக் கொண்டு விடுவார்களென்று நிச்சயமாக நம்பினேன்.

ஆனால் நான், அவர்களை இலக்கியத் துறையிலும் பயிற்றுவித்து சிறந்த தெனக் கருதிய படியால் ஸ்ரீமான்கள் காலன்பக், பிராக்ஜி தேசாய் ஆகியோ ரின் உதவியைக் கொண்டு மாணவர் களுக் கென்று சில வகுப்புகளை ஆரம் பித்தேன். மாணவர்களின் தேக வலிமையை விருத்தி செய்வதிலும் நான் அலக்ஷியமாக இருந்ததில்லை. இதை அவர்கள் அதி எளிதில் தினசரி வாழ்க்கையிலேயே பெற்று வந்தார் கள். எவ்வாறெனில், எங்கள் பண்ணை யில் சேவகர்கள் இல்லாமையால் பண் ணையிலிருந்தவர்களே சமையல் வேலை முதல் கக்கூசுவாரும் வேலை வரை செய்து வந்தோம். மேலும் அங்கே தோட்ட வேலையும், பழ மரங்களும் இருந்தபடியால் அவைகளை மாணவர் களே கவனித்து வந்தார்கள். ஸ்ரீகாலன் பக் தோட்ட வேலையில் அதிக ஆவலு டையவர். அவர் சர்க்கார் பரீக்ஷார்த்த தோட்டங்களில் வேலை செய்து தக்க அனுபவத்தையும் பெற்றிருந்தார். எங்கள் பண்ணையில் சமையல் வேலை யில் ஈடுபடாத வாலிபர், முதியோர் ஆகிய அனைவரும் பிரதிதினமும் சிறிது நேரம் தோட்ட வேலையைக் கவனிக்க வேண்டு மென்பது எங்கள் பண்ணை யின் கட்டாயச் சட்டமாக இருந்தது. அதிலும் சிறு பிள்ளைகளுக்கே தோட்ட வேலையிலுள்ள அதிக சிரமமான வேலைகளெல்லாம் கொடுக்கப்பட்டன. அவர்கள் குழி தோண்டுதல், விறகு பிளத்தல், சாமான்களைத் தூக்குதல் முதலியவைகளைச் செய்து வந்தனர். இவைகள் அவர்களுக்குத் தேவைக் கதிகமான தேகாப்பியாசத்தையே கொடுத்தன. மேலும் அவர்களும் இத்தகைய வேலைகளில் அதிக ஊக்கத் தையும், உற்சாகத்தையும், ஆவலையும் காட்டினார்களாதலின் அவர்களுக்கு தேகாப்பியாசமோ, விளையாட்டோ வேண்டு மென்னும் அவசியம் இருக்க வில்லை. ஆனால் சிற் சில சமயங்களில் அவர்களுள் சிலரும், அபூர்வமாகப் பலரும் ஒன்றாகச் சேர்ந்து வேலை செய்யப் பின் வாங்குவதுமுண்டு. நான் அவர்களுடைய சேஷ்டைகளை அறிந்து கொண்டு அவர்களிடம் கடுமை யாக நடந்து கொள்வேன். அவர்களில் ஒருவராவது நான் கடுமையாக நடந்து கொள்வதை விரும்ப வில்லை யென்று நிச்சயமாகக் கூறுவேன். ஆனால் ஒரு வராவது நான் கடுமையாக இருந்த போது எனக்குக் கீழ்ப்படியாமல் என்னை எதிர்த்ததாக ஞாபகமில்லை. நான் கடுமையாக இருந்தபோதெல்லாம் அவர்களுக்குஒருவர் வேலையில்ஈடுபட்டி ருக்கும்போது மற்றவர் அவருடன் விளையாடுவது கூடா தென்று விளக்கிக் கூறுவேன். ஆனால் நான் இவ்வாறு கூறுவதால் அவர்களுக்கு ஏற்படும் உணர்ச்சி சிறிது நேரமே இருக்கும். மீண்டும் அவர்கள் தங்கள் வேலைகளை விட்டு விளையாடப் போய்விடுவார்கள். எவ்வாறிருப்பினும் நாங்கள் காலத்தைக் கடத்தி விட்டோம். அவர்களும் நல்ல தேக வலிமையைப் பெற்றனர்கள். அவர்கள் நல்ல காற்றையும், ஜலத்தை யும், வேளை தவறாத ஆகாரத்தையும் பெற்று வந்தார்களென்று நிச்சய மாகக் கூற முடியாவிடினும், எங்கள் பண்ணையில் நோய் அபூர்வ மாகவே காணப்பட்டது.

இச் சந்தர்ப்பத்தில் நான் கைத் தொழில் சம்பந்தமான பயிற்சியைப் பற்றி ஒரு சிறிது கூற விரும்புகிறேன். என் பண்ணையிலிருந்த ஒவ்வொரு வாலிபரும் ஏதேனுமொரு கைத் தொழில் கற்றுக் கொள்ள வேண்டு மென்பது என் பிரியமாக இருந்தது. இதற்காகவே ஸ்ரீ. காலன்பக் ஒரு ஆசிர மத்துக்குச் சென்றுசெருப்புத்தைக்கும் வேலையைக் கற்றுக் கொண்டு வந்தார். நான் அவரிட மிருந்து அத் தொழிலைக் கற்றுக் கொண்டு அதைக் கற்றுக் கொள்ள விரும்பிய வாலிபர்களுக்குக் கற்றுக் கொடுத்தேன். மேலும் ஸ்ரீ. காலன்பக் தச்சு வேலையில் சிறிது அனுபவம் பெற்றிருந்ததுடன் எங்கள் பண்ணையி லிருந்த வேறொருவரும் அதை அறிந்திருந்தா ராதலின் நாங்கள் தச்சு வேலையைக் கற்றுக் கொடுப்பதற் காகவும் ஒரு வகுப்பை ஏற்படுத்தி

னோம். பெரும் பான்மையான வாலி பர்கள் சமையல் வேலையை அறிந்தி ருந்தார்கள்.

ஆனால் இவைகளெல்லாம் அவர்களுக் குப் புதிய தொழில்களாகும். ஒரு நாள் இத் தொழில்களைக் கற்றுக் கொள்ளக் கூடிய சமயம் வருமென்று அவர்கள் கனவிலும் கருதிய தில்லை. ஏனெ னின், பொதுவாகத் தென்னாப்பிரிக் காவில் இந்தியச் சிறுவர்கள் உபாய மான கல்வியையே கற்று வந்தார்கள். மேலும் எங்களுடைய டால்ஸ்டாய் பண்ணையில், உபாத்தியாயரும் செய் யாத எந்த வேலையையும் பையன்கள் மட்டும் செய்ய வேண்டு மென்று விதி இருக்க வில்லை. எனவே பிள்ளை களுக்கு ஏதேனும் வேலையைச் செய் யும்படி சொன்ன போ தெல்லாம், உபாத்தியாயரும் அவர்களுடன் ஒத்து ழைத்து அவர்களுடன் வேலையைச் செய்து வந்தார். ஆதலின் வாலிபர் கள் கற்றவைகளை யெல்லாம் சந்தோ ஷத்துடனும் உற்சாகத்துடனும் கற்று வந்தார்கள். நற்குண அமைப்பை பற்றியும், இலக்கியக் கல்வியைப் பற்றி யும் பின்னர் கூறுவேன்.

(2-ம் பக்கத்தின் தொடர்பு.)

போகப் போகச் சுவை குறைந்து விடுதல் சாதாரணம்.

“சிகாகோ ஈவினிங் போஸ்ட்” என்னும் பத்திரிகையில் தற்போது பிரதான தலையங்கம் வரைவோரான மிஸ்டர் ஜே. டங்கன் கிளார்க் தாம் பத்திரிகைத் தொழிலின் இரகசியத் தை அறிந்துகொண்ட வரலாற்றைச் சமீபத்தில் வெளியிட்டார். முதலில் லூயிவில்விநகரிலிருந்த ஒரு பத்திரி கையின் குட்டி நிருபராக அவர் வாழ்க் கை தொடங்கினர். ஒரு நாள் அந் நகரின் பிரபல மாது ஒருத்தி ரயி லில் அகப்பட்டு இறந்ததைப் பற்றிய விவரத்தை எழுதிவரும் பொறுப்பு அவருக்குத் தற்செயலாகக் கிடைத் தது. அவர் அது சம்பந்தமான விவரங்களை நன்றாகச் சேகரித்துக் கோவையாக எழுதி அனுப்பினர். சிறிது நேரத்துக்கெல்லாம் ஆசிரியர் அவரைக் கூப்பிட்டபோது தமது திற மையை மெச்சுவதற்காக என எண்ணி அவர் போனர்.

ஆசிரியரோ மிகவும் காரத்துடன் “அவளுக்கு நேர்ந்த முடிவென்ன? முடிவென்ன?” என்று கேட்டார்.

“ஏன்? அவள் கொல்லப்பட்டாள். நாலாவது பாராவைப் பாருங்கள்” என்றார் டங்கன் கிளார்க்.

மரணத்தை நாலாவது பாராவில் எதற்காக ஒளித்துவைத்தீர்? காரணம் என்ன?” என்றார் கோபங் கொண்ட ஆசிரியர்.

“ஜனங்கள் திடுக்கிட்டுப் போகா வண்ணம் நிதானமாக வெளியிட எண் ணினேன்” என்றார் டங்கன் கிளார்க்.

“அப்படியானல் உமக்குப் பத்திரி கைத் தொழிலே தெரியாது” என் றார் ஆசிரியர்.

மேற்படி சம்பவத்துக்குப் பிறகு “நான் அவர்களை முதல் பாராவிலே யே கொன்றுவிடுவது வழக்கம்!” என்று டங்கன் கிளார்க் கூறுகிறார்.

பத்திரிகை என்பது ஒரு சுக போ கப் பொருளன்று. அது வாழ்வுக்கு அவசியமான ஒன்று. ஜனங்களுக்கு ஊழியம் செய்வதினாலேயே பத்திரி கை வெற்றி பெற முடியும். அதன் வாணாள் காலம் அது செய்யும் ஊழி யத்தையே பொறுத்ததாகும். சமீபத் தில் சந்தா நேயர் ஒருவர் ஒரு பத் திரிகாசிரியருக்குப் பின்வருமாறு எழுதினர்:—“எங்கள் குடும்பத்தின் வாழ்க்கைச் செலவுத் திட்டத்தில் தங்கள் பத்திரிகைச் சந்தா ஒரு பகுதி யாகும். எங்களுக்கு உடைகளும், உருளைக் கிழங்குகளும், நிலக்கரியும் எவ்வளவு அவசியமோ அவ்வளவு உங்கள் பத்திரிகையும் அவசியமான பொருளாகும்,” இதிலுள்ள உண்மை யை யாரே மறுக்க முடியும்?

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# மகாத்மா காந்தி அபிப்பிராயம்.

## சென்னைக் காங்கிரஸ்—பள்ளி மாணவர் கூட்டம்.

## பொறுப்பற்ற பேச்சும், பலமற்ற நிலைமையும்.

### தன் மதிப்புப் போச்சு.

### வீண் பயமுறுத்துதலும் கேலிக் கூத்தும்.

உபசரணைக் கமிட்டி ஒரு பெரிய தவறுதலைச் செய்து விட்டது.

சென்னைக் காங்கிரஸைப் பற்றி மகாத்மாஜீ "யங் இந்தியா" வில் எழுதியிருக்கும் வியாசத்தில் டாக்டர் அன்ஸாரியும் பண்டித மாளவியாவும் நீண்டகாலமாக வேண்டப்படும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை ஏற்படுத்த எடுத்துக்கொண்ட முயற்சியைப் பாராட்டியிருக்கிறார். அவர் கூறியிருப்பதாவது:— அம் மகாநாட்டில் உண்டு பண்ணப்பட்ட நம்பிக்கை இன்னும் அதிகமாகப் பரவி எங்கும் வியாபிக்குமென்று நம்புவோம். இந்தத் தீர்மானம் முடிவாக விஷயாலோசனைக் கமிட்டியிலிருந்து வெளிவந்து காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட உருவத்தில் அது உண்டுபண்ணியிருக்கும் மனமாறுதல் சென்னைக் காங்கிரஸ் சாதித்த பெரிய காரியமாகும். இது தீங்கை உண்டுபண்ணக் கூடாதென்றும் தேசத்தின் இப்போதைய நிலைமையில் இதுதான் சிறந்ததென்றும் தான் அதைப்பற்றிக் கூறமுடியும். ஆயினும் அது இன்னும் அதிகமான பலன்களை உண்டுபண்ணக் கூடியது. காங்கிரஸின் வேண்டுகோள் ஹிந்துக்கள் முஸ்லிம்கள் இவர்களுடைய மனதில் பதிந்து அவரவர் பாத்தியதைகளில் பரஸ்பரம் உணர்ச்சியைப் புண்படுத்தாமல் விட்டுக்கொடுத்து நடந்தால் சமாதானம் ஏற்பட்டுவிட்டதாயும் ஸ்வராஜ்யம் கிட்டிவிட்டதாயும் கொள்ளலாம். நமக்குள் சண்டைபோட்டுக் கொள்வதன் மூடத்தனத்தை நன்றாக உணர்ந்து அதற்குத் தகுந்தபடி நடப்பதே லார்டு பர்க்கன் ஹெட் பிரிட்டனின் பலத்தை இறுமாப்புடன் நமது தேசத்தின் முகத்தில் பிரயோகித்திருப்பதற்குச் சரியான பதிலாகும். மிகவும் வேண்டப்படும் இந்தப்பலன் ஏற்பட வேண்டுமானால் தேச ஜனங்களிடம் சென்று இச்செய்தியைப் பிரசாரம் செய்து அவர்களுடைய ஆதரவை அதற்குப் பெறுவதற்காக டாக்டர் அன்சாரி சமாதான தூதகோஷ்டிகளை அனுப்பவேண்டும். அதற்குப் போதுமான பலம் நமக்கு இருக்கிறதா? யோக்கியமாயும் விடாமுயற்சியுடனும் விருப்பத்துடனும் வேலை செய்யக் கூடிய தூதர்கள் நமக்கு இருக்கிறார்களா? இருப்பதாகவே நம்புவோம்.

கமிட்டிக் கூட்டங்களுக்கு நான் போக முடியாமற்போனாலும் பொறுப்பற்ற வழியில் பலர் பேசியதையும், நடந்ததையும், கண்டிப்புக்கு உட்படாததையும் அறியாமலில்லை. வெகுதூரம் பாதிக்கக்கூடிய தீர்மானங்கள் விஷயாலோசனைக் கமிட்டியில் திடீரென்று பிரேரிக்கப்பட்டு அதிக யோசனையாவது விவாதமாவது இன்றி ஒப்புக்கொள்ளப் பட்டே விட்டன. சென்ற வருஷம் நிராகரிக்கப்பட்ட சுயேச்சைத் தீர்மானம் இவ்வருஷம் எதிர்ப்பே இன்றி நிறைவேற்றப்பட்டு விட்டது. அதன் வாசகம் கெடுதலாக வில்லை யென்று நானறிவேன். ஆனால் அது அவசரமாகக் கொண்டுவரப்பட்டு யோசனையின்றி நிறைவேற்றப்பட்டது. பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரத் தீர்மானம் இம்மாதிரியே லேசாக நிறைவேற்றப்பட்டுவிட்டது. அநுபவத்தில் நடத்திவைக்க முடியாதென்று தெரிந்திருக்கையில் இம்மாதிரித் தீர்மானங்களை ஒவ்வொரு வருஷமும் நிறைவேற்றிக் கொண்டிருப்பதன் மூலம் காங்கிரஸ் தனது மதிப்பைக் கெடுத்துக் கொள்ளுகிறது. இம்மாதிரித் தீர்மானங்களை நிறைவேற்றுவதின் மூலம் நமது பலமற்ற நிலைமையை நாம் காட்டிக் கொள்ளுகிறோம். எதிரிகள் நம்மைக் கேலி செய்யுமாறு இடம் கொடுக்கிறோம். காங்கிரஸ் விரும்பினால் பிரிட்டிஷ் சாமான்களைத் தாராளமாகப் பகிஷ்கரிக்க அதற்கு உரிமையுண்டு. ஆனால் அனுபவத்தில் நடத்திவைக்க முடியாதென்று அறிந்து வீண் பயமுறுத்தல்களை வெளியிட்டுக் கேலிக் கிடங்கொடுக்க இந்தியாவின் பிரதிநிதி ஸ்தாபனமாகிய அதற் குரிமையில்லை. காங்கிரஸின் தீர்மானங்கள் காகிதத்தோடு நின்று ஜனங்கள் அவற்றின்படி நடத்திவைக்க வேண்டிய பொறுப்பு இல்லாவிட்டால் பிறர் எதிர்க்க முடியாத சக்தியை அது பெற முடியாது. காங்கிரஸ் மெம்பர்கள் விதிகளுக்கும் கண்டிப்புக்கும் உட்படாவிட்டால், அவர்கள் தங்கள் தேசத்தின் ஊழியர்களாகையால் யோக்கியமாயும் வாக்குப்படியும் நடந்துகொள்ள வேண்டுமென்று உணராவிட்டால், காங்கிரஸ் மகாசபை விசேஷ பலம் பெற்ற ஸ்தாபனமாக இருக்க முடியாது. உலகத்தின் எந்த தேசத்தினுடைய பார்லிமெண்டு மெம்பர்களுக்கும் சமமாக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மெம்பர்களுக்குச் சேவைசெய்ய அதிகாரமும் உரிமையும் உண்டு. ஆனால் நாம் இப்போது பள்ளிக் கூட மாணவர்களுடைய விவாத சங்கத்தின் நிலைமைக்கு இறங்கிவிட்டோம்.

### பொருட்காக்ஷிக் கண்டனம்.

அகில இந்தியப் பொருட்காக்ஷியைப் பற்றி மகாத்மாஜி கூறியிருப்பதாவது:— அகில இந்தியக் காக்ஷி என்று கூறப்படுவதைத் தன் ஆதரவில் நடத்துமாறு காங்கிரஸ் உபசரணைக் கமிட்டி அனுமதித்த தன் மூலம் ஒரு பெரிய தவறைச் செய்து விட்டது. அந்தக் காட்சியில் அன்னிய தேச சாமான்களும் பிரிட்டிஷ் சாமான்களுமே அதிகமாக விருந்தன. சுதேசி சாமான்கள் மிகவும் குறைவாக விருந்தன. சுதேசியத்தை ஆதரிப்பதென்ற கொள்கையை உடையதும் பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரத்தை வேலைத் திட்டத்தில் சேர்த்துக்கொண்டிருப்பதுமான காங்கிரஸ் மகாசபையின் ஆதரவில் இக்காக்ஷி நடத்த அனுமதிக்கப்பட்டிருப்பது மிகவும் வருந்தத் தக்கதாகும். அது காங்கிரஸ் உணர்ச்சியையே மறுப்பதாக விருந்தது. சென்ற 6-வருஷங்களாக நடத்தப்பட்ட கதர் சுதேசிப் பொருட்காக்ஷிகளிலிருந்து இது அடியோடு மாறுபட்டதாக விருந்தது. இந்த வெள்ளையானையை வேண்டுமென்று எந்தக் காங்கிரஸ்காரரும் ஆதரித்ததாக நான் கூறவில்லை. யோசனைக் குறைவும், கவனக்குறைவும், பொறுப்பின்மையும் தான் இந்த கேவலமான காரியத்திற்குக் காரணம். இனிமேல் அமைக்கப்படும் உபசரணைக் கமிட்டிகள் உஷாராயிருக்கட்டும்.

---

## மலாய் நாட்டு நாடார் பெரு மக்களுக்கு ஓர் வேண்டுகோள்.

கனவான்களே! நம் மித்திரன் பத்திராதிபர் ஸ்ரீமான் சூ. ஆ. முத்து நாடாரவர்கள் நம் மித்திரன் காரியார்த்தமாக மலாய் நாட்டுக்கு விஜயம் செய்யப் போவதாய் மித்திரனில் கண்டிருப்பீர்கள். அவர்கள் குறிப்பிட்டபடி புறப்படுந் தினம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இதற்குள், அன்னாரை வரவேற்று உபசரிப்பதற்குண்டான ஏற்பாடுகள் ஆங்காங்கு நடந்திருக்கலாமென நம்புகிறேன். கனம். பத்திராதிபர் அவர்கள் தங்களுடைய விசேஷ ஆதரவு நம்மித்திரனுக்குக் கிடைக்குமென நம்பிக்கை கொண்டு நெடிய கடல் கடந்து தங்கள் சமூகங்களைக் காண வருகிறார்கள். இவ்விடயத்தில், குலாபிமானம் ததும்பும் தங்களுக்கு யான் ஒன்றும் அதிகம் புகட்டத் தரமுடைத்தேனல்லன். காரியம் மிகவும் முக்கியமான தென்று தாங்களறிந்ததே.

நம் சமூகத்திற்கு ஓர் பத்திரிகையில்லையே என்று ஏக்க முற்ற காலத்து நமது நாடார் மகாஜன சங்கம் நம் மகர்தூள் ஓர் பத்திரிகை உதிக்கும் மார்க்கந் தேடிக் கொண்டிருந்தது. அது சமயத்தில் ஸ்ரீமான் சூ. ஆ. முத்து நாடாரவர்கள் நம் குல வாட்டந் தவிர்க்க ஓர் பத்திரிகை நடத்தும் பெரியதோர் பளுவைத் தாங்கமார் தட்டி முன் வந்து "நாடார் குல மித்திர" னைத் தோற்று வித்தார்கள். மித்திரன் பிறந்த நாட்தொட்டு இது காறும் புரிந்து வந்த ஊழியத்தை நாடார் சமூகம் மறக்க முடியாது.

நம் குலநலம் கொண்டுழைக்க ஜெனித்த மித்திரனுக்கு இது போது வயது ஒன்பது நிகழ்கிறது. அவன் பிறந்து மாதம் ஒரு முறை யுலவி, பின் இருமுறை, மும் முறையாகி ஐந்தாவது வயது முதல் வார மொருமுறை யுலவிக் கொண்டிருக்கிறான். இதற்குள் பல தந்துகளுக்குத் தப்பி உயிர் கொண்டிருக்கிறான். உயிர் நீடித்திருந்து அவனாலாய பயனை நம் குலம் அடைந்து கொண்டிருக்கச் செய்ய நாம் ஒவ்வொருவரும் கருத்துக் கொள்ள வேண்டும்.

மித்திரனின் ஜீவாதாரம் அன்பர்களளிக்கும் சந்தா, நன்கொடை, போஷகப் பண வமுதேயாகும். தற்போது, இவ் வமுது நாளாவர்த்தியாகக் குறைந்து வந்து விட்டதால் சரியான போஷிப்பின்றி மித்திரன் தயங்குகிறான் என்று தெரிய வருகிறது. இத் தயக்கம் தவிர்க்கவே கனம். பத்திராதிபர் அவர்கள் தங்களிடம் நண்ண எண்ணி யுள்ளார்கள். கற்பக நாட்டிலுறை தங்களை யடுக்கும் போது அவர்கள் கோரிக்கை நிறை வேறாது போமா? போகாது போகாது. எனினும் இது சமயத்தில், 'சுடர் விளக்காயினும் தூண்டு கோல்' ஒன்று வேண்டும் என்பதற்கிணங்க இது விஷயம் பற்றி தங்களுக்கு வேண்டுகோள் செய்து கொள்ளாமலிருக்க முடியவில்லை. யான் வேண்டுவ தெல்லாம் கனம். பத்திராதிபர் அவர்கள் ஆங்கு விஜயம் செய்யுங் காலத்து அவர்களுக்கு வேண்டிய உதவி புரிந்து அவர்கள் கோரிக்கையைத் திருப்திகரமாய் முடித்துக் கொடுத்தனுப்பி வைக்க வேணு மென்பதே. தாங்கள் தரும் ஆதரவைப் பொறுத்தே யிருக்கிறது மித்திரனின் வருங்கால க்ஷேம நிலையெனலும் தகும்.

ஆகையால் கனவான்களே! இச்சமய உதவிக்குத் தாங்கள் ஒவ்வொருவரும் முன் வர வேண்டும். நாடார் என்ற ஹோதாவில், நாடார் ஒவ்வொருவரும் நம் "நாடார் குல மித்திர" னை ஆதரிக்கக் கடப்பட்டுளார் என்பது தாங்களறிவீர்கள். தயவு செய்து ஆங்காங்கு தக்க கிளர்ச்சி செய்து மித்திரன் காரியத்தை இனிது நிறை வேற்றிக் கொடுப்பீர்களாகவும். மித்திரனுக்குப் புத்துயிர் கொடுக்கத் தாங்கள் புரியும் பே ருபகாரத்தை மித்திரன் என்றும் மறவாது நன்றி செலுத்திக் கொண்டிருப்பான். நாடாருலகப் போற்றுதலுக்கும் உரித்தாவீர்கள்.

மு. மீ. சீனிப்பாண்டியன்.

---

## "நாடார் பரிபாலன சங்கம்", விருதுநகர்.

### முதலாண்டு நிறைவு விழா.

### நடவடிக்கைகள்.

8-1-28-ல் பகல் 2-மணி வண்டியில் மதுரையிலிருந்து நாடார் மகாஜன சங்க அக்கிராசனர் ஸ்ரீமான் கனகசபை நாடாரும், காரியதரிசிகள் ஸ்ரீமான்களான பாண்டிய நாடார், சோமசுந்தர நாடாரும், ஸ்ரீ கார்மேகக் கோனார், முத்துக்குமாரநாடார் முதலியவர்களும் வந்து சேர்ந்தார்கள். இவர்களை இந்நகர் "நாடார் பரிபாலன சங்க" த்தார்கள் வரவேற்று மேள வாத்தியங்களுடன் மோட்டார் வாகனத்தில் ஏற்றி ஊர்வலம் வந்து மாலை 4-மணிக்கு இவ்வூர் நாடார்கள் க்ஷத்திரிய வித்தியா சாலைக்குக் கொண்டுவந்து அங்கு இந்நகர் ராயல் ஸ்டூடியோ கம்பெனியால் செய்யப்பட்டு மேற்படி வித்தியா சாலைக்கு சன்மானமாகக் கொடுக்கப்பட்டிருந்த காலஞ்சென்ற ஸ்ரீமான் மாணிக்கவாசக நாடார் அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைக்கும்படி கேட்டு, மேற்படி ஹைஸ்கூல் மானேஜர் ஸ்ரீமான் எஸ். பி. பி. ஷண்முகசுந்தர நாடார் பேசுகையில் ஸ்ரீமான் மாணிக்கவாசக நாடார் இந்த ஹைஸ்கூலில் இருபது வருடகாலம் தலைமை ஆசிரியராகவிருந்து தொண்டாற்றியதையும் சிறிது காலம் அவர் முனிசிபல் கவுன்ஸிலராக விருந்து பொது ஜனங்களுக்குச் செய்த அரிய சேவையையும் எடுத்துச் சொல்லி அவருடைய ஞாபகார்த்தமாக வைக்கும் அவருடைய திருவுருவப்படத்தைத் திறந்து வைக்குமாறு ஸ்ரீமான் கனகசபை நாடாரை கேட்டுக்கொண்டார். ஸ்ரீமான் கனகசபை நாடார் ஸ்ரீமான் மாணிக்கவாசக நாடாரைப் பற்றி தனக்குத் தெரிந்ததை எடுத்துச் சொல்லி கரகோஷத்தினிடையே படத்தைத் திறந்து வைத்தார். அப்பால் நாடார் பரிபாலன சங்கத்திற்குப் பக்கத்தில் ஸ்ரீமான் அ. சு. சொ. பழனியப்ப நாடாருடைய வீட்டிற்கு முன்பாக அமைத்திருந்த சிங்காரப் பந்தலில் மேற்படி சங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவுவிழாக் கூட்டம் கூடியது. கூட்டத்திற்கு ஸ்ரீமான்களான எம். எஸ். பி. செந்திக்குமாரநாடார், வி. வி. ஷண்முகநாடார், அ. சு. சொ. ச. சங்கபாண்டிய நாடார், வெயிலு முத்துசாமிநாடார், மாரியப்ப நாடார், சுந்தரமய்யர், சுந்தரராஜ ஐயங்கார். இன்னும் அநேக பிரமுகஸ்தர்களும் விஜயம் செய்திருந்தார்கள். முதலில் ஸ்ரீமான் சுந்தர பாண்டிய நாடார் சங்கத்தின் நோக்கத்தை எடுத்துச் சொல்லி பிறையாறு பிரபல மிராசுதாரரும் நாடார் மகாஜன சங்க அக்கிராசனருமாகிய ஸ்ரீமான் கனகசபை நாடாரை அக்கிராசனம் வகிக்குமாறு வேண்டிக் கொண்டார். இதை டாக்டர் ஸ்ரீமான் நாச்சியப்ப இராமசாமி நாடார் ஆமோதிக்க நீண்ட கரகோஷத்தினிடையே ஸ்ரீமான் கனகசபை நாடார் அக்கிராசனம் வகித்தார். முதலில் அக்கிராசனருக்கு சங்கத்தினர்களால்வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. அதன் மேல் அக்கிராசனர் தமது பிரசங்கத்தை நிகழ்த்தினர். அக்கிராசனப் பிரசங்கம் முடிவுற்றதும் காரியதரிசியால் சங்க அறிக்கை வாசிக்கப் பெற்றது. பின் மதுரை தமிழ் வித்துவான் ஸ்ரீமான் கார்மேகக் கோனார் அவர்கள் "தமிழ் மொழியும், தமிழர்களும்" என்பது பற்றி நீண்டதோர் பிரசங்கம் நிகழ்த்தினார்.

அப்பால் ஸ்ரீமான் சுந்தரராஜ் அய்யங்கார் பி. ஏ. எல். டி. அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட பள்ளி மாணவர்கள் "சபாபதி" என்னும் நாடகத்தை அதி விமரிசையாக நடத்திக் காண்பித்தார்கள். பின் அக்கிராசனரால் நாடகத்தில் திறமையாய் நடித்த மாணவர்களுக்கு பதக்கம் முதலிய சன்மானங்கள் வழங்கப்பட்ட பின் காரியதரிசியின் வந்தனோபசாரத்துடன் இரவு 9 மணிக்குக் கூட்டம் இனிது முடிவடைந்தது.

அக்கிராசனப் பிரசங்கம் அடுத்த வார மித்திரன் பார்க்கவும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# அன்பும், அதிகாரமும்.

## லெனின் காந்தி கொள்கைகள்.

### ஒரு ஜெர்மானியரின் அபிப்பிராயம்.

ரீனி புல்லப் மில்லர் என்னும் ஜெர்மானியர் "லெனினும் காந்தியும்" என்னும் பெயருடன் ஒரு நூல் வரைந்திருக்கிறார். இந்நூலைப்பற்றி எர்னஸ்ட் லோதர் என்பார் வியன்னாப் பத்திரிகை ஒன்றில் விரிவான மதிப்புரை எழுதியிருக்கிறார். அதன் ஆங்கில மொழி பெயர்ப்பு "லிவிங் ஏஜ்" என்னும் பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. அக்கட்டுரையின் சாராம்சம் வருமாறு:—

"இல்லை; இந்தவழி சரிப்படாது!" என்று ஓர் இளைஞன் தன் சகோதரனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதைக் கேட்டதும் உரத்துக் கூறினான். இச் சகோதரன் மூன்றாம் அலெக்ஸாண்டர் ஸார் சக்கரவர்த்தியைக் கொலைசெய்ய முயன்றதற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டவன். பின்னர் அச் சகோதரனைக் கொலையாளி கொலைக் கூடத்திற்கு அழைத்துச் சென்றபோதும் அவ்விளைஞன் அநுதாப வார்த்தை ஒன்று கூடப் பகரவில்லை. "இல்லை; இந்த வழி சரிப்படாது!" என்று மட்டுமே அவன் கூவினான். அந்தத் தொனியைக் கேட்டவர்கள் அச்ச முற்றார்கள். அவ்விளைஞனுக்கு அப்போது 17-வயது. இரண்டாண்டுகளுக்குப் பின்னர், பஞ்சத்தினால் அடிபட்ட ருஷியர்களுக்கு உதவி செய்வதற்காகக் கூடிய ஒரு கமிட்டிக் கூட்டத்தில், நாடு கடத்தப்பட்ட அம்மானுக்கன் தோன்றினான். அங்கு நிகழ்த்தப்பட்ட சில பிரசங்கங்களைக் கேட்டதும் அவன் குதித்தெழுந்து "வேண்டாம்! வேண்டாம்! எங்களுக்கு உதவி வேண்டாம்!" என்று கத்தினான். பஞ்சத்தில் அடிபட்டவர்களுக்கு உதவி செய்வது தவறு என்றும், ஏனெனில் அது ஸார் சக்ரவர்த்திக்கு உதவி செய்வதேயாகுமென்றும் அவன் வாதமிட்டான். பசியும், பட்டினியும் இன்னும் அதிகம் பரவும்படியே செய்ய வேண்டுமென்றும், அப்போதே கொடுங் கோலாட்சியை வீழ்த்த முடியுமென்றும் அவன் சொன்னான். அவன் அவ்வளவு ஆத்திரத்துடன் பேசினபடியால் அங்கிருந்தவர்கள் நடுங்கிப் போனார்கள். கடைசியில் அவனைப் பைத்தியக்காரன் என்று பிடித்து வெளியே தள்ளிவிட்டார்கள். இது ஸமாராவில் நடந்தது.

இருபத்தெட்டாண்டுகளுக்குப் பின்னர் அவன் இதே பிரசங்க மேடைக்கு வந்தான். இப்போது அவனைப் பைத்தியக்காரன் என்று துரத்துவதற்குப் பதிலாக, தெய்வமாகப் பூசித்தார்கள். இருபத்தெட்டாண்டு அவன் நாடு கடத்தப் பட்டவனாய், தினந்தோறும், உயிர்க்கு அபாயத்தை எதிர் பார்த்தவனாய், இரகசிய முயற்சிகள் செய்து கொண்டு காலங் கழித்திருந்தான்.

லெனின் வாக்கு வன்மை பொருந்திய பிரசங்கியல்லர். சாதாரண நாடகக்காரன் எவனும் அவரை விட நன்றாகப் பேசிவிடுவான். ஆனால் அவர் வெளியிட்ட கருத்துக்கள் அற்புதமானவையா யிருந்தன. அவர் பேச்சில் இனிமை யில்லை; கவிதையில்லை; உவமையணிகளில்லை. ஆயினும் அவர் கூறிய விஷயங்கள் மாந்தரைக் கவர்ந்து விடுவனவா யிருந்தன.

விரைந்த நோக்குள்ள அவர் கருங் கண்கள் ஒரு கணமேனும் தங்கள் இலட்சியத்தினின்றும் அசைவதில்லை.

வெற்றியினால் அவர் ஏமாறுவதில்லை. வெற்றி முழக்கங்களுக்கிடையே அவர் நிதானமும் எச்சரிக்கையு முள்ளவரா யிருந்தார்.

அவர் பேச்சிலே தற்பெருமையோ, பயனற்ற அடைமொழிகளோ, வெற்றி முழக்கமோ காணப் படுவதில்லை, நிதானமாயும், கணக்குடனும் அவர் வார்த்தைகளை எண்ணிப் பேசினார்.

எந்த விஷயத்திலும் அவர் அரைகுறையாக இறங்குவதில்லை. அரை மனதுடன் வேலை செய்தல் அவர் இயல்புக்கு மாறானது. அவர்மனச் சாந்தியை எத்தகைய விபத்தும் அலைக்க முடியாது. பயமென்பதை அவர் அறியார். உள்ளத்திலே அவர் உணர்ச்சி யுள்ளவர். இலட்சிய மனப்பான்மை படைத்தவர். மதப் பற்றுள்ளவர்.

ஆனால் சந்தர்ப்பமும், சௌகரியமுமே அவருடைய மதங்களாகும். அவர் தமது கட்சி அமைப்பு முழுவதையும் மதத்துக்கு விரோதமாகத் திருப்பினார். கடவுளைப் "பொது உடைமை இராஜ்யத்துக்குப் பெரும் விரோதியான பிசாசு" என்று அவர் கூறினார். எல்லா மதக் கோட்பாடுகளையும் அவர் பாரபட்சமின்றித் தாக்கினார். பக்தி, கலை, கல்வி என்னும் எல்லாவற்றையும் அவர் பலி கொடுத்தார்.

இந்த மனிதர் அதிகாரத்தையும் இயந்திரங்களையும் அடிப்படையில் அன்பு செய்தார். அவர் கூறியதாவது:— "என் அரசியல் விரோதிகள் நசுக்கப்பட்டதற்குக் காரணம் அவர்களிடம் இரக்கம் கொஞ்சம் இருந்ததேயாகும். ...மரண ஏதுவான சண்டையில்லாமல் உங்கள் சத்துருக்களை அடக்கிவிட முடியுமா? அப்படி எண்ணுதல் மன்னிக்க முடியாத பல வீனம். வெறும் மாயைப் புரட்சியின்போது பயங்கர ஆட்சியைக் கைக்கொண்டிராவிட்டால் நாம் வெற்றி பெற்றிருக்க முடியுமா?". கார்க்கி என்பாருக்குத் தமது கடுமுறைகளைப்பற்றி லெனின் எழுதியதாவது:—"கட்டுக் குலைந்தவர்களிடையே ஜீவகாருண்யம் நிற்குமா? நாம் தயாளுக்களாகவோ, மனோ பல மற்றவர்களாகவோ இருக்கப் போமா? மன்னியுங்கள். நாங்கள் மூடர்களல்லர். எங்களுக்கு என்ன வேண்டுமென்று எங்களுக்குத் தெரியும். எங்களுக்குச் சரியென்று தோன்றுவதைச் செய்ய வொட்டாமல் யாரும் தடுக்கமுடியாது." மரண தண்டனை விதிக்கப்பட்ட சிலரை மன்னித்து விடும்படி அவர் மனைவி கேட்டுக்கொண்டபோது "என் மனைவியின் பிரார்த்தனைகளுக்கு நான் செவிகொடேன். அவை பயனற்றவை" என்று சொல்லிவிட்டார்.

லெனின் சக்தி உபாசகர். பகைவன் பலவா[illegible]யிருந்தால் அவனைவிடப் பலம் பெற்று அவனை நசுக்க வேண்டுமென்பவர். சமாதானக் கொள்கைகளை அவர் எள்ளி நகையாடினார். எந்த ஒரு கொள்கையிலும் நிலைத்து நிற்கும் விருப்பம் அவருக்கில்லை. குடியானவர்கள் தங்கள் இழிந்த நிலையை எதிர்த்துக் கலகம் செய்யத் தலைப்பட்ட போது அவர் தம் கொள்கைகளை யெல்லாம் காற்றில் விட்டார். பொது உடைமைக் கொள்கைகளை மறந்து 'புதிய பொருளாதாரக் கொள்கை'யைக் கைக்கொண்டார். அவர் கொள்கையற்றவர் என்று யாரேனும் சொன்னால் சிரிப்பார். பழைய வழி பயனற்றதென்றும் புதிய வழியே சிறந்ததென்றும் அதிகாரத்துடன் அறைந்தார்.

பலமும் சக்தியும் இயந்திரத்தினால் பெறவேண்டும். பழைய முறைகள் தொலைந்து ஐரோப்பாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் புதிய புதிய இயந்திரங்கள் வரவேண்டும். மோட்டார் கலப்பைகள், அறுவடை இயந்திரங்கள், தேச முழுவதும் மின்சார சக்தி, அமெரிக்க ஜெர்மானிய, ஆங்கில என்ஜினியர்கள், விஞ்ஞான கலாசாலை, புதிய இயந்திரத் தொழிலாளிகள், ஆகாயத்தை யளாவிய கட்டடங்கள்—ருஷியா அமெரிக்காவைத் தோற்கடித்துவிட வேண்டும்!

முடியுங் காரியமா? லெனின் மீண்டும் சிரித்தார். விருப்பத்தினால், அமைப்பினால் ஆகாதது ஒன்றுமில்லை. இச் சக்தி உபாசகர் ஓர் இரவில் நூறாண்டு வளர்ச்சியை ருஷியாவுக்கு அளித்துவிட்டார்.

லெனின் சக்தி பொருந்திய தன் மொழிகளால் லட்சக்கணக்கான ஜனங்களின் மனதைத் திருப்பிவிடக் கூடியவர்: பலவீனத்தையும், இரக்கம் முதலிய குணங்களையும் வெறுப்பவர்; துவேஷத்தின் அவதாரம்; இயந்திர தெய்வத்தை வழிபட்டவர்; எனினும் கடைசி வரையில் கனவு காண்பவரா யிருந்தார்.

அவரிடம் சந்தேகமும், உறுதியும், தெளிவும், மயக்கமும், காரியவாதமும், மனோராஜ்யமும் கலந்திருந்தன. அவர் குளிர்ந்த தீ மலை; பனிக்கட்டி நெருப்பு. அவர் இறந்தபோது அவர் தொடங்கிய வேலை முடிவாகவில்லை. ஐரோப்பாவுமில்லை; ஆசியாவுமில்லை என்று சொல்லக்கூடிய ருஷியாவை அவர் விட்டுச் சென்றார். குழப்பமே மிகுந்திருந்தது.

இவருக்கு நேர்மாறானவர் காந்தி. அவர் பூர்வீக ஜனங்களிடையே தோன்றியவர். அவரைக் கிறிஸ்து போன்றவர் என நாம் பயமின்றி அழைக்கலாம். உலகத்திலே கடவுள் தன்மையும், தாய்மையும், அன்பு செய்வதற்குத் தகுதியும் கொண்டவர்களில் இணையற்றவர். ஹிந்துக்களுக்கு அவர் மகாத்மா.

காந்தி அவலட்சணமானவர். தட்டையான வளைந்த மூக்கு; அகலமான வாய்; ஒழுங்கற்ற மீசை; வாயிலோ பற்கள் சில இல்லை. அவர் தலையை க்ஷவரம் செய்து கொள்கிறார். அவர் கோணல் காதுகள் நீட்டிக்கொண்டிருக்கின்றன. அவர் கழுத்தும், கைகளும், கால்களும் மிகச் சிறியவை. மெலிந்த, பழுப்பு நிறமுள்ள அவர் உடலைச் சட்டையினால் மூடுவதில்லை.

ஆனால் அவர் அழகியவருமாவார். அவர் முகத்தில் இருண்ட இருகண்கள் தெய்வீக இனிமை பொருந்தி விளங்குகின்றன. அக்கண்களிலிருந்து ஒளி வீசுகிறது. ஐம்பத்தெட்டு வயதானவரின் முகத்திலே அவை குழந்தைக் கண்களாகக் காணப்படுகின்றன. பின்னர், எப்போதும் புன்னகையின் அறிகுறி. அவர் பேச ஆரம்பிக்கும் போது அது சிரிப்பாக மலர்கிறது.

இந்த அவலட்சணமான மனிதரின் முகத்தில் தெய்வீக ஒளியும், தெய்வீகச் சிரிப்பும் குடிகொண்டிருக்கின்றன. அவை அம் முகத்துக்குத் தெய்வீக அழகு தருகின்றன.

"உறுதி" என்னும் ஒரே வார்த்தையினால் அவரை ரொமேன் ரோலண்டு குறிப்பிட்டிருக்கிறார். காந்திக்கு உயரிய மதபீடம் ஏதுவுமில்லை. அற்புதங்கள் செய்து காட்டியோ இனிப்பான பேச்சினாலோ அவர் மாந்தர் மனதைக் கவரவில்லை. மத குருக்களுக்குரிய நீண்ட அங்கிகளும் அவர் தரிப்பதில்லை. அவர் அரை நிர்வாணமாயிருக்கிறார்.

பத்துக் கோடி ஜனங்கள் அவர்பிரசங்கங்களைக் கேட்டிருக்கிறார்கள். அவருடைய கொள்கைகள் இரண்டு. அவருடைய திட்டம் அறுவகைத்து. வீட்டில் கையால் நூற்று அந்நூலால் நெய்த துணியையே அணியும்படி அவர் முதன்மையாகச் சொல்கிறார். இதனால் தொழிலாளிகளுக்குப் பிழைப்பு ஏற்படுமென்றும் ஜனங்கள் ஒற்றுமைப் படுவார்களென்றும் அவர் சொல்கிறார். பின்னர், பசுவைப் போற்றும்படி கேட்கிறார். தூய்மை, மதுவிலக்கு, புலனடக்கம் இவற்றைக் கைக்கொள்ளும்படி போதிக்கிறார். பிரிட்டிஷ் ஆட்சியுடன் ஒத்துழையாமை கொள்ளச் சொல்கிறார். 'பறைய'னும் பிறரும் சமத்துவமானவர்களே என்று உபதேசிக்கிறார். கடைசியில், ஹிந்து முஸ்லிம்கள் ஒற்றுமைப்பட்டு ஒரு தேச மக்களாக வேண்டுமென்கிறார். இதுவே அவருடைய அறுவகைத் திட்டம். அஹிம்சையும், சத்தியாக்கிரஹமும் அவருடைய இரண்டு கொள்கைகள். அஹிம்சை யென்பது அன்பை அடிப்படையாகக் கொண்ட செயலின்மை; சத்தியாக்கிரஹம் அன்பை அடிப்படையாகக் கொண்ட செயல்.

மேற்கூறிய திட்டத்தில் நமக்கு மிக முக்கியமாகத் தோன்றக்கூடியது அதில் அரசியலும் மதமும் கலந்திருப்பதுதான். காந்தி தீர்க்கதரிசியும் இராஜதந்திரியும் ஆவார் என்பதை அது காட்டுகிறது. அரசியலும் ஒழுக்க நெறியும் ஒன்றென அவர் சொல்கிறார்.

அவர் பிச்சைக்காரனைப் போல் வாழ்ந்தார். "அவருடைய வாழ்க்கை தியாகத்துக்கு மற்றொரு பெயராகும்" என்று தாகூர் கூறினார். அவர் எப்போதும் எளிய வாழ்க்கையே வாழ்ந்து வந்தபடியால் சிறையிலிடப் பட்டபோது அவர் தம் வீட்டுக்கும் அதற்கும் அதிக வேற்றுமை காணவில்லை.

## "வாலிப நாடார் சங்கம்," கும்பகோணம்.

"இந்த "வாலிப-நாடார் சங்கத்"தார் திருவாரூரில் முனிஸிபல் சபைக்கு நியமிக்கப்பெற்ற ஸ்ரீ வெற்றிவேல் நாடார்மகன் சாமிநாத நாடாருக்குப் பதிலாக, ஸ்ரீ விநாயக மூர்த்திநாடார் மகன் சாமிநாத நாடாரை நிறுத்திவைத்த ஒரு சில சுயநலமிகளுடைய போக்கை வன்மையாகக் கண்டிப்பதுடன், ஸ்ரீ வெற்றிவேல்நாடார்மகன் சாமிநாத நாடார்தான் கும்பகோணத்தில் நடந்த நாடார் 11-வது மகாநாட்டில் ஸ்ரீமான் டபிள்யூ. பி. ஏ. சௌந்தரபாண்டிய நாடார் யம். யல். சி. அவர்களால் சிபார்சு செய்யப் பெற்றவரென்று உறுதியாகக் கூறுவதோடு அவருடைய நியமனத்தை உறுதி செய்யும்படி கனம் மந்திரி அவர்களை இச்சங்கமும் கவுன்ஸிலும் கேட்டுக்கொள்ளுகின்றன;

இந்த தீர்மானத்தின் நகலை கனம் ஸ்தல ஸ்தாபன இலாகாமந்திரி அவர்களுக்கும் தஞ்சாவூர் கலெக்டர் துரை அவர்களுக்கும் அனுப்பும்படி காரியதரிசிக்கு அனுமதி கொடுக்கிறது"

என்ற தீர்மானம் சென்ற 3-1-28ல் இச்சங்க ஆதரவில் கூடிய விசேஷ கவுன்ஸில் 2-வது தீர்மானமாக வி. சின்னதம்பி நாடாரால் பிரேரிக்கப்பெற்று திருவாளர் எஸ். தங்கவேலுநாடார் அவர்கள் ஆதரிக்க இதர அங்கத்தினர்களால் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பெற்று நிறைவேறியது எனக்காரியதரிசி எழுதுகிறார்.

---

அவர் வக்கீல் தொழில் செய்தார், ஆனால் எத்தகைய வக்கீல்! அவர் கட்சிக்காரர்களையோ, வருமானத்தையோ தேடவில்லை. நியாயத்தையே தேடினார். கட்சிக்காரர்கள் தம்மிடம் பொய் சொன்னார்களென்றோ, அவர்கள் கட்சி அநீதக் கட்சியென்றோ தெரிந்தால் வழக்குகளைத் தொலைத்து விடுவார். கடைசியில் அவர் அத்தொழிலையே விட்டொழித்தார்.

1908—ல் அவரை ஒரு முரடன் கொல்ல முயற்சித்தான். இவ்வழக்கில் காந்தி, எதிரி தரப்புச் சாட்சியாக வந்தார். "இம்மனிதன் நான் அவனுக்கு ஏதோ தீங்கு செய்ததாக எண்ணி அதனால் தவறிழைத்தான். அவனைத் தண்டிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அவனை நான் நேசிக்கிறேன். அவனுடைய அன்பைப் பெறலாமென்றும் நம்புகிறேன்"என்று அவர் கூறினார்.

இவ்வாறு இதற்கு முன் எவரும் செய்ததில்லை. கொலை செய்ய முயன்றவன் காந்தியைப் போற்றி அவருக்கு ஒரு கடிதம் எழுதினான். அதற்குப் பின்னர் காந்தி 30 கோடி ஜனங்களைத் தன் வழியே திருப்பினார். இவ்வளவையும் எந்த ஆயுதத்தின் துணையினால் செய்தார்? அன்பெனும் ஆயுதத்தினாலேயே.

பகைமையும், பலாத்காரமும் பயனற்றவை என்று காந்தி சொல்கிறார். அன்பே சக்தி என்கிறார். அச்சக்தி அவரிடம் பிரகாசிக்கிறது. அவருடைய ஒவ்வொரு மூச்சிலும் சக்தி வெளியாகிறது.

'பறையன்' புதல்வியான அநாதை லட்சுமியை அவர் தமது ஆசிரமத்தில் சேர்த்துக் கொண்டு தமது சொந்தக் குழந்தையாக வளர்த்து வருகிறார். இந்தியாவில் தீண்டத் தகாதவர்கள் எனப்படும் ஆறு கோடி பேரின் பிரதிநிதி அவள். இவ்வாறு தேசத்தின் புராதனக் கெட்ட வழக்கத்தில் ஒன்றைக் காந்தி தமது அன்பெனும் ஆயுதத்தினால் தகர்த்தெறிந்தார்.

காந்தியின் வாழ்க்கை ஒரு வகையில் லெனின் வாழ்க்கையை ஒத்ததாகும்; மற்றொருவகையில் மாறுபட்டதாகும். இருவரும் அபாரமான சக்தியின் நிலைக்களங்கள். இருவரும் உலகத்தின் மேன்மை வாழ்வை இலட்சியமாகக் கொண்டவர்கள். ஆனால் காந்தியின் சக்தியும், இலட்சியமும் அன்பு மயமானவை. அவ்வன்பு பாதாளத்திலிருந்து சுவர்க்கம் வரை பரவி நிற்கும் பெருமையுடையது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection